# தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி
# (தேசிய பாடசாலை)

## திருகோணமலை

## இரத்தினவிழா சிறப்பு மலர்

45 ANNIVERSARY

# விவேகரதம்

## 2023

# தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி
# (தேசிய பாடசாலை)

## திருகோணமலை

## இரத்தினவிழா சிறப்பு மலர்

# விவேகரதம்

# 2023

## மகுட வாசகம்

கல்வி, ஒழுக்கம், தூய்மை

## Motto

Education, Discipline, Purity

## நோக்கு

அறிவு மிகுந்த உலகிற்கு ஈடு கொடுக்கத்தக்க தேர்ச்சி மிக்க பிரஜைகள்

## Vision

Competent citizens who cope with the erudite world

## பணி

களத்தில் நடப்பது கடந்தகால நிகழ்கால அனுபவங்களுடன் வருங்காலத்தின் சவால்களை ஆராய்ந்தறிந்து மேம்பட்ட கற்றற் சந்தர்ப்பங்களை வழங்குவதன் மூலம் அறிவும், திறனும், ஒழுக்கமும் உள்ள மாணவர்களை உருவாக்கிக் கொடுத்தல்

## Mission

To create knowledge, skillful, disciplined and honest students by providing ameliorated learning opportunities through an analysis of the experiences of the past present and the challenges of the future

## பாடசாலை கீதம்

உவர்மலை கல்லூரி விவேகானந்தா வாழ்க
ஊதா வெள்ளைக் கொடி நிமிர்ந்தாட
உவர்மலை மக்கள் உவந்தளித்தனராம்
உயரிய செயலால் உளம் நிறைந்தனராம்!

ஒளியருள் கோணேசர் மலைமுடியில் - எங்கள்
எழில் தவழ் உவர்மலை கலை வடிவில்
கிளி மொழி தமிழ் எங்கும் வழிந்தோட – அதன்
கிருபையில் நாட்களும் கழிந்தோட!

கங்கா ஜமுனா காவேரி சிந்து
கற்பவரிடையே படை நான்கும்
எங்கள் திறமைகள் துலங்கிடுமே – அதன்
இனிமையில் பணிகளைத் தொடங்குவோமே!

உலகின் சிகரம் கல்வியென்போம் - அதன்
உண்மையை உணர்வோம் உயர்வடைவோம்
கலைகள் பலவும் வளர்த்திடுவோம் - என்றும்
கற்றதை மற்றவர்க் குணர்த்திடுவோம்!

***இயற்றியவர்***

***திருமலைக் கவிராயர்***

# *SCHOOL DETAILS - 2023*

- Name of school : T/ Orr's Hill Vivekananda College
- Address : Orr's Hill, Trincomalee.
- Type of School : 1 AB
- School Was started : 1978.02.10
- School I.D No : 1701008
- Examination No : 29124
- School Census No : 16058
- Province : Eastern
- District : Trincomalee
- Zone : Trincomalee
- Divisional Education office : Trincomalee
- Divisional Secretary : TrincomaleeTown & Gravets
- Postal No : 31000
- Election No : 14
- Grama Seva Division No : 244/P
- School Phone No : 026-2222761
- School E-mail Address : t.o.vivekananda@gamil.com
- **School Website : ovctrinco.schweb.lk**
- **Youtube Address : https://youtube.com @TTORRSHILLVIVEKANANDHA**

# தவத்திரு அகத்தியர் அடிகளாரின் ஆசிச் செய்தி

**தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி**

தி/ விவேகானந்தா கல்லூரி தனது நாற்பத்தைந்தாவது ஆண்டினை நினைவு செய்யும் வகையில் விவேக ரதம் எனும் இதழினை வெளியிடுகின்றது. விவேகம் என்பதற்கு பகுத்துணரும் வல்லமை எனப்பொருள் கொள்ளலாம். ரதம் என்பது தேர் அறிவைச் சுமந்து வருவதாக அமையும் இவ்விதழானது தன்னுள்ளே பண்பைச் சுமக்கும் அன்பைச் சுமக்கும் கலை பண்பாட்டைச் சுமக்கும். குறிப்பாக திருக்கோணமலையில் கல்வி மேம்பாட்டுக்காய் தன்னை இயக்கிக் கொள்வதாய் வெளிவருகின்ற இவ்விதழ் பயனுள்ளதாக அமையும் என்பது எம் நம்பிக்கை. கல்வியிலே மிகவும் சிறந்து விளங்கும் கல்லூரிக்கு எமது வாழ்த்துக்கள் அதிபர் ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் அனைவருக்கும் எமது பாராட்டுக்கள்.

போற்றி ஓம் நமசிவாய

தவத்திரு அகத்தியர் அடிகளார்
முதற்குரு மாகா சந்நிதானம்
தென்கயிலை ஆதீனம்
திருக்கோணமலை.

# DIOCESE OF TRINCOMALEE

**Rt. Rev. Dr. Christian Noel Emmanuel**
**Bishop of Trincomalee**

*Bishop's House,*
*Orr's Hill, Trincomalee,*
*Sri Lanka.*
*Tel.: +94 26 222 2677, Fax: +94 26 222 3238*
*Email: bishoptrincomalee@gmail.com*


## ஆசியுரை

திருகோணமலை, உவர்மலை விவேகானந்தா கல்லூரி தனது 45 வருட நிறைவில் இரத்தின விழா எடுக்கும் இவ்வேளையில் கல்லூரியால் வெளியிடப்படும் மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஒரு பாடசாலை உயர அதனோடு தொடர்புடைய அனைவரும் பங்களிக்க வேண்டும். 1978ம் ஆண்டு சிறிய பாடசாலையாக கல்விப்பணியைத் தொடங்கிய இப்பாடசாலை பல சாதனைகளைப் படைத்து தற்போது 1AB தரமுள்ள கல்லூரியாக உயர்ந்துள்ளது பெருமைக்குரிய விடயமே. உவர்மலையில் வாழும் மாணவர்களுக்கும் இதனை அண்டிய பகுதிகளில் வாழும் மாணவர்களுக்கும் இக்கல்லூரி பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. பல எண்ணிக்கையில் மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். க.பொ.த. உயர்தர பரீட்சையை நிறைவுசெய்து பல்கலைக்கழகத்திற்கும் தெரிவாகியுள்ளனர். இவை கல்லூரியின் வளர்ச்சியை எடுத்துக்காட்டுகின்றது. அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள்.

கல்வி அனைவருக்கும் அவசியமானது. மாணவர்களுக்கு சிறப்பாக நாம் கல்வியைக் கொடுக்கும்போது அவர்களுக்கு நல்ல எதிர்காலத்தையே கொடுக்கிறோம். தொலைத் தொடர்பு சாதனங்களும், மது, மற்றும் போதைவஸ்தும் மாணவர்களது கல்வியையும் சிந்திக்கும் ஆற்றல்களையும் சிதைக்கின்ற காலமிது. இதுபோன்ற சவால்களின் மத்தியில் மாணவர்களை கல்வியிலும் நல்ல விழுமியங்களிலும் வழிநடத்த வேண்டியது கல்லூரியின் கடமையாகும். ஆயினும் அதிபர் ஆசிரியர்களில் மட்டும் முழுப் பொறுப்பையும் திணித்துவிடாமல் சமூகமும் இவர்களுக்கு ஆதரவாக செயல்பட வேண்டும். பெற்றோர் அரச அதிகாரிகள். பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழு, மதத்தலைவர்கள், சமூகத் தலைவர்கள் இணைந்து தமது ஆதரவைக் கொடுக்கும்போது கல்லூரிக்குப் பெரும் பலமாக நாம் மாறிவிடுவோம்.

உவர்மலை விவேகானந்தா கல்லூரி விருட்சமாக வளரக் காரணமாயிருந்த அதிபர்கள், ஆசிரியர்கள், கல்லூரிச் சமூகம் அனைவருக்கும் எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். கல்லூரி மேலும் பல வெற்றிகளுடன் வளரவும் கலங்கரை விளக்காகத் திகழவும் வாழ்த்தி இறையாசீர் வேண்டி நிறைவு செய்கின்றேன்.

+C.N. Emmanuel

பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்
திருகோணமலை மறைமாவட்ட ஆயர்.

Rt.Rev. Dr. Christian Noel Emmanuel
Bishop of Trincomalee

"All things to all people"

# மாகாணக் கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



தேவாரப்பாடல் பெற்ற திருக்கோணேஸ்வரம் எனும் திருத்தலம் அமையப்பெற்றுள்ள, திருகோணமலை நகரின் மேற்குப் பகுதியில் அமைந்திருக்கின்ற புறநகர் பகுதியாக விளங்கும் உவர்மலையில் கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் கண்ணகி அம்மன் ஆலயச் சூழலோடு அமைந்ததாக தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி விளங்குகின்றது. திருகோணமலை கல்வி வலயத்திற்கு உரிய இப்பாடசாலையின் நாற்பத்தைந்தாவது வருட நிறைவிலே வெளிவரும் **விவேக ரதம்** இதழுக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

நாற்பத்தைந்து வருட குறுகியகால வரலாற்றைக் கொண்ட இக்கல்லூரி வளமுள்ள சிறந்த நற்பிரஜைகளை நாட்டிற்கு வழங்கியுள்ளது. கல்வி மற்றும் இணைப்பாட விதான செயற்பாடுகளில் மாணவர்களின் உள்ளார்ந்த ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து அவர்களை சாதனையாளர்களாக மாற்றி பெருமிதத்தோடு விளங்குகின்றது.

கல்வி ஒழுக்கம் தூய்மையெனும் மகுடந்தாங்கி மாசற்ற ஆளுமை மிக்க மாணவ சமுதாயத்தை எதிர்கால சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடிய வகையில் உருவாக்கி தேசிய இலக்குகளோடு பயணித்து, மென்மேலும் வளர்ச்சிபெற மனநிறைவோடு வாழ்த்துகின்றேன்.

கல்லூரியின் வரலாற்றையும் மாணவர்களின் கல்வி மற்றும் இணைப்பாட விதான செயற்பாடுகளில் வலய, மாகாண, தேசிய சாதனைகளின் விபரங்களையும் பல்வேறு ஆக்கங்களையும் தன்னுள் உள்ளடக்கி வெளிவரும் இவ் **விவேகரதம்** இரத்தினவிழா இதழாக வெளிவருவதையிட்டு எனது வாழ்த்துகளை தெரிவிப்பதோடு, பல சாதனைகளுக்குச் சொந்தக்காரர்களான மாணவர்களை உருவாக்கும் அதிபர் அவர்களுக்கும், அவர்களோடு சேர்ந்து பணியாற்றும் அனைத்து பணிக்குழாத்தினருக்கும் மனம் நிறைந்த வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திருமதி.எஸ்.குலேந்திரகுமார்
மாகாணக்கல்விப் பணிப்பாளர்
மாகாணக்கல்வித் திணைக்களம்
கிழக்கு மாகாணம்
திருகோணமலை

# திருகோணமலை வலயக்கல்விப் பணிப்பாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி



கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த திருகோணமலை மண்ணிலே சுவாமி விவேகானந்தரின் நாமம் சூடி அவரைப் போன்றே கம்பீரமாகத் தோற்றந் தரும் உவர்மலை விவேகானந்தா கல்லூரியின் நாற்பத்தைந்தாவது ஆண்டு விழா மலராகிய **விவேக ரதத்திற்கு** வாழ்த்துரை வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

இம்மண்ணிலே மாண்புயர் மாணவர்களை உருவாக்குகின்ற உன்னதமான பணியை உவந்து செய்யும் பாடசாலைகளில் உவர்மலை விவேகானந்தா கல்லூரியும் ஒன்றாகும். திருகோணமலை கல்வி வலயத்தில் சிறப்பாகச் செயற்படும் நகரப்புறப் பாடசாலைகளில் குறுகியகால வரலாற்றையும் வேகமான வளர்ச்சியையும் கொண்ட இக்கல்லூரியின், **'விவேக ரதம்''** பாடசாலையின் நீண்ட கால சாதனைப்பட்டியல்களை ஆவணமாக சுமந்து வருவது சிறப்புக்குரியது. இதில் இடம் பெறும் மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் ஆக்கங்கள் அவர்களது புலமையைப் பறைசாற்றுகின்றன.

நாளைய தலைமுறையினரை நாட்டிற்குப் பொருத்தமானவராக உருவாக்கி கொடுக்கும் அரியபணி பாடசாலைகளிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. அப்பணியை செவ்வனே ஆற்றும் இக்கல்லூரிச் சமூகத்தினரையும் பல்வேறு வழிகளில் பாடசாலையின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு நல்கும் பெற்றோர் மற்றும் பழைய மாணவர்கள் ஆகியோரை சிறப்பாக வழி நடத்தி அழைத்துச் செல்லும் கல்லூரியின் அதிபர் திரு.K.ரவிதாஸ் அவர்களையும் பாராட்டியே ஆகவேண்டும்.

குறுகிய காலத்தில் வேகமான வளர்ச்சி கண்ட இக்கல்லூரி மென்மேலும் சிறந்த பெறுபேறுகளைப் பெறவேண்டும். பல சாதனைகளை நிகழ்த்த வேண்டும். ஒழுக்கமும் கண்ணியமும் மிக்க சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என வாழ்த்துவதில் பெரு உவகையடைகின்றேன்.

நன்றி

அன்புடன்
தினகரன் ரவி
வலயக்கல்விப் பணிப்பாளர்
வலயக்கல்வி அலுவலகம் திருகோணமலை

# கல்லூரி அதிபர் அவர்களின் வாழ்த்துச் செய்தி



தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரியின் நாற்பத்தைந்தாவது ஆண்டு நிறைவு மலராகிய **விவேக ரதம்** வெளிவருவதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன். இக் கல்லூரியின் அதிபராக ஆறு வருடங்களை முழுமையாகப் பூர்த்தி செய்து இவ் வருட இறுதியுடன் ஓய்வு பெறவிருக்கும் இத் தருணத்தில் இவ் **இரத்தின விழா** இதழ் வெளிவருவது இரட்டிப்பு மகிழ்ச்சியாக உள்ளது.

கடந்த நாற்பத்தைந்து வருடகால கல்வி அடைவு மட்டம் மற்றும் மிக முக்கியமான சாதனைகள் பற்றிய தரவுகளையும் தன்னகத்தே சுமந்து கொண்டு விவேகரதம் வெளிவருகின்றது. இக் கல்லூரியை எதிர் காலங்களில் வழி நடத்திச் செல்லவிருக்கும் சகல ஆளுமைகளுக்கும் பாடசாலை சமூகத்தினருக்கும் இவ்விதழ் சிறந்த தரவுத்தளமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

இக்கல்லூரி நான்கரை தசாப்த்த காலப்பகுதிக்குள் பெரும் வளர்ச்சி நிலைமையைப் பதிவு செய்தள்ளது. இவற்றுள் அண்மையச் சாதனைகள் மிகவும் பாராட்டக்கூடியவை .தேசிய, சர்வதேச மட்டங்களிலும் எமது மாணவர்கள் தமது ஆற்றலையும் வெற்றியையும் வெளிப்படுத்தி வருகின்றார்கள். இவர்களுடைய இச் சாதனைகளை ஆவணப்படுத்தும் இதழாக இது அமைவது சிறப்புக்குரியது.

கல்வி அபிவிருத்தியோடு இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் நமது கல்லூரி கூடிய அக்கறையோடு செயற்படுகின்றது. இத்தகைய வெற்றிக்காக உழைத்த எனது மதிப்புக்குரிய பிரதி, உதவி, அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள் அனைவருக்கும் எனது மனங்கனிந்த நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதோடு இக் கல்லூரி மென்மேலும் வளர எனது நல்லாசியையயும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. K. ரவிதாஸ்
அதிபர்
தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி
(தேசிய பாடசாலை)

# பிரதி அதிபர் அவர்களின் வாழ்த்துச் செய்தி




எழில் கொஞ்சும் கோணேசர் பூமியிலே தென் கையிலை எனப் போற்றப்படும் திருகோணமலையில் கண்ணகி அம்மனின் அருளாசி பெற்று ஓங்கி வளர்ந்து வரும் உவர்மலை விவேகானந்தா கல்லூரி தனது வளர்ச்சிப் பாதையில் முன்னோக்கிச் செல்கின்றது.

அந்த வகையில் சுமார் 45 ஆண்டுகளுக்கு மேலாக பல சாதனைகளை ஆற்றி வரும் இவ்வேளையில் ஆக்கபூர்வமான அறிவியல் சிந்தனையினூடாக பல நிகழ்வுகளிலும் கலைத்திட்ட செயற்பாடுகளிலும், இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் முன்னிலையில் நிற்கின்றது.

மாணவர்கள் தமது ஆற்றல்களை வெளிக்கொண்டு வருவதற்கு களம் அமைத்துக் கொடுப்பதுடன் அவர்களின் முயற்சிக்கு துணையாக நிற்பதுடன் எதிர்கால நற்பிரஜைகளை உருவாக்குவதற்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றுகின்ற இக்கல்லூரியிலிருந்து வெளிவருகின்ற விவேகரதம் சஞ்சிகையானது மாணவர்கள், ஆசிரியர்களின் ஆக்கங்கள் பாடசாலையில் உள்ள குழுக்களின் படங்கள் கல்லூரியில் கடந்த ஆறு வருடங்களில் நிகழ்ந்த வரலாற்று சாதனைகளை உள்ளடக்கியுள்ளது இச்சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

திரு.ம.பிரகாஷ்
பிரதி அதிபர் (கல்வி அபிவிருத்தி, ஆரம்ப பிரிவு)
தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி
(தேசிய பாடசாலை)

# உதவி அதிபர் அவர்களின் வாழ்த்துச் செய்தி



உவர்மலை விவேகானந்தா கல்லூரியின் நாற்பத்தைந்தாவது அகவையையொட்டி வெளியிடப்படும் விவேகரதம் எனும் இதழுக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமிதம் கொள்கின்றேன். குறுகிய காலத்துள் பெருவளர்ச்சி கண்ட இக் கல்லூரி பெற்றுக்கொண்ட அண்மைய வெற்றிச் சாதனைகளை சுமந்து வரும் இந்நூல் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் ஆக்கங்களையும் சுமந்து வருகின்றது.

கல்லூரியில் இயங்கும் பல்வேறு கழக உறுப்பினர்களின் வண்ணப்புகைப்படங்கள் மற்றும் எமது கல்லூரி அதிபர் அவர்களுக்கான வாழ்த்துப் பாக்கள் என பல்வேறு விடயங்களையும் தாங்கி வருகின்றது. பௌதீக வள அபிவிருத்தி பற்றிய தகவல்களும் இணைப்பாடவிதான சாதனைப்பட்டியல்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.இவை உண்மையில் பலருக்கும் பயன்படும் ஆவணமாக உள்ளமை சிறப்பான விடயமாகும்.

எமது கல்லூரி மேலும் பல சாதனைகளைப் படைக்க வேண்டும் என்பதில் பேரவா கொள்கின்றேன்.இவ்விதழ் சிறப்பாக வெளிவரவும் எல்லோருக்கும் பயன்தரும் வகையிலும் அமைய எனது ஆசியையும் நல்வாழ்த்துகளையும் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி கொள்கின்றேன்.

திருமதி.சு.கோகுலதாசன்
உதவி அதிபர்
தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி

# உதவி அதிபர் அவர்களின் வாழ்த்துச் செய்தி



திருகோணமலை வலயத்தில் இயற்கை வனப்புடன் கூடிய சிறந்த கலாச்சார ஒழுக்க விழுமியங்களைப் பேணி வரும் தி / உவர்மலை விவேகானந்தா கல்லூரியின் 45 ஆவது ஆண்டு சிறப்பு மலரான விவேகரதம் சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

கல்வி , ஒழுக்கம், தூய்மை எனும் மகுட வாசகத்தை தாங்கி பல்வேறு கல்விச் சாதனைகளைப் புரிந்து வரும் எமது கல்லூரி தேசிய மட்டத்திலும் பல வெற்றிகளையீட்டி தனக்கென ஒரு தடம் பதித்துள்ளது. இக்கல்லூரியின் அதிபர் திரு. க ரவிதாஸ் ஐயா அவர்களின் சிறந்த தலைமைத்துவமும் கடமை உணர்வும் சேவை மனப்பாங்குடன் செயலாற்றும் ஆசிரியர் குழாமும் இக்கல்லூரி வளர்ச்சிக்கு தூண்களாக அமைகின்றன. "**விவேகரதம்**" சஞ்சிகையானது மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் ஆக்கங்களையும் பாடசாலையின் பல்வேறு நிகழ்வுகளையும் தாங்கி வெளிவரும் சிறந்ததொரு ஆவணமாகவும் காலக் கண்ணாடியாகவும் விளங்குகின்றது.

எனவே இச்சிறப்பு மலர் வெளிவருவதில் முன்னின்று உழைத்த அனைவரையும் நன்றியுடன் பாராட்டுவதுடன் பகுதித்தலைவர் திரு.வே.சுந்தரராஜன் அவர்களுக்கும் விசேட நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் தனது சிறப்பான சேவையை ஆற்றி ஓய்வு பெற்றுச் செல்லவுள்ள எமது கல்லூரியின் முதல்வர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஓய்வுக் காலம் சிறப்பாக அமைய வேண்டும் என இறைவனை வேண்டிக் கொள்கின்றேன்.

திருமதி.விஸ்ணுகுமார்
உதவி அதிபர் (ஆரம்பக்கல்வி)
தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி

# நூலாசிரியரின் எண்ணத்திலிருந்து....

**விவேகரதம்** எனும் இம் மலரானது மொட்டவிழ்ந்து மணம் வீசி இரத்தின விழா மலராக உங்கள் கரங்களில் தவழ்கின்றது.கல்லூரியின் நாற்பத்தைந்து வருட பூர்த்தியை சிறப்பிக்கும் வகையில் இவ்விதழானது வெளிவருகின்றது. உவர்மலை விவேகானந்தா கல்லூரியானது குறுகிய கால வரலாற்றைக் கொண்டிருந்தாலும் தனது ஒவ்வொரு வளர்ச்சிப்படிக்கட்டையும் தாண்டி வந்த தடயங்களையும் பதிவு செய்தே வருகின்றது. அந்த வகையில் விவேக ரதம் எனும் இதழானது இதற்கு முன்னைய காலங்களில் வெளிவந்திருந்தாலும் நீண்ட இடைவெளியின் பின்னர் இவ்வருடம் பல ஆவணப்படுத்த வேண்டிய விடயங்களை சுமந்தே வருகின்றது. இவ்விதழானது பலருக்கும் பலவகைகளில் உதவக்கூடும்.

முன்னை நாள் அதிபர்களின் நிழல் படங்களையும் தற்போதைய ஆளணியினரின் படங்களையும் தாங்கி அழகு செய்கின்றது.கல்லூரியின் நாற்பது வருட பெறுபேற்றுத் தரவுகள், இணைப்பாட விதான வெற்றி விபரங்கள், பௌதிக வளம் தொடர்பான விபரங்கள், கல்லூரி சார்ந்த வரைபடங்கள் என பல்வேறு விபரங்களைத் தாங்கி வருகின்றது.இவற்றை விட இவ்வருடத்துடன் தனது சேவையிலிருந்து ஓய்வு பெறவிருக்கும் கல்லூரியின் அதிபர் அவர்களை வாழ்த்திப் பாராட்டிய கட்டுரைகளும் இடம்பெறுகின்றன.

கல்லூரியின் குறித்த தரவுகளை ஆவணப்படுத்தி நூல்வடிவம் கொடுக்க வேண்டும் என்ற மதிப்பிற்குரிய அதிபர் திரு.K.ரவிதாஸ் அவர்களின் வேண்டுகோளுக்கமைவாகவும் பலருக்கும் பயன்மிக்கதாக அமைய வேண்டும் என்ற நோக்கத்துக்காக வெளிவரும் இவ்விதழ் குழுவினருள் மதிப்பிற்குரிய அதிபர் அவர்களுக்கும் ஏனைய குழுவினருக்கும் ஆசியுரைகளையும் வாழ்த்துரைகளையும் தந்துதவிய பெரியவர்கள் அனைவருக்கும் பல்வேறு ஆக்கங்களை தந்துதவியவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வே.சுந்தரராஜன்
இதழாசிரியர்

# நூலாக்கக் குழுவினர்

- திரு.க.ரவிதாஸ் (அதிபர்)
- திரு.ம.பிரகாஸ் (பிரதி அதிபர்)
- திரு.வே.சுந்தரராஜன் (இதழாசிரியர்)

**இணை இதழாசிரியர்கள்**

- திருமதி.சி.யுவராஜ்குமார்
- திரு.நா.ஜெயபிரகாஸ்
- திரு.கி.சதீஸ்குமார்

அங்கத்தவர்கள்

- ஸ்ரீ.லோசிஹா
- ஆர்.சாகரி
- எஸ்.நிகுந்தன்

# உள்ளடக்கம்


1. அதிபரின் அறிக்கை
2. முதல் நாள் சம்பவத்திரட்டுப் பிரதி (10.02.1978)
3. பாடசாலை தர உயர்வு பெற்ற ஆண்டுகள்
4. பாடசாலை வரைபடம்
5. காணி வரைபடம்
6. நூலகக்கட்டிடந் தொடர்பான கடிதங்கள்
7. ஆசிரியர்களின் பெயர் விபரம்
8. மாணவர் தொகை 2023
9. பிரதேச ரீதியான மாணவர் விபரம்
10. கல்லூரியின் வளர்ச்சிப் பாதையில்
11. சேவையாற்றிய அதிபர்களும் காலப்பகுதியும்
12. தரம் 5 பெறுபேறு
13 சிறந்த பெறுபேறு 2018-2022 க.பொ.த (சா/த)
14. சிறந்த பெறுபேறு 2018-2022 க.பொ.த (உ/த)
15. உச்சப் பெறுபேற்று வரைபடம்
16. இணைப்பாட விதான வெற்றிகள் 2018-2023
17. பௌதீக வள அபிவிருத்திகள் 2018-2023
18. க.பொ.த (சா/த) பெறுபேறு பகுப்பாய்வு 1984-2022
19.மணிவிழாக் காணும் எங்கள் அதிபர்
20. திருகோணமலையின் மாணவ சமூகம்
21. விழித்தெழுவாய்..
22. வாழ்த்துப்பா..
23. வெறிக்கனிகள்…
24. கவிதையே கல்லூரியாய்…
25. வெண்ணிலவே…
26. ஆசிரியர்கள்

# OUR PRINCIPAL




## Mr.K.Ravithas

### SLPS - I

### B.A, PGDE, MED



திரு. M. பிரகாஷ்
பிரதி அதிபர்



திருமதி
த. விஷ்ணுகுமார்
உதவி அதிபர்



திருமதி
சு. கோகுலதாசன்
உதவி அதிபர்

# எமது கல்லூரியில் இருந்து அதிபராக நியமனம் பெற்றவர்கள் – 2023 November



திருமதி.த.ரஞ்சனன்



திருமதி.த.கெங்காதரன்



திரு.A.R.எமில்ரன்

---

## பகுதித் தலைவர்கள்



திருமதி.ஆனந்தராஜா
ஆரம்பக்கல்வி பகுதித்தலைவர்



திருமதி.சி.யுவராஜ்குமார்
பகுதித் தலைவர் தரம் 6,7



திருமதி.த.கெங்காதரன்
பகுதித்தலைவர்
தரம் 8,9 2023 November வரை



திருமதி.T.அசோக்
பகுதித் தலைவர்
தரம் 8,9



திரு.வே.சுந்தரராஜன்
பகுதித் தலைவர்
தரம் 10,11



திருமதி.S.சுபாஸ்
பகுதித் தலைவர்
தொழிநுட்ப பிரிவு



திருமதி.ஜெயபாலினி
பகுதித் தலைவர்
கணித விஞ்ஞான பிரிவு



திரு.வ.மோகனராஜா
பகுதித் தலைவர்
கலை வர்த்தகப் பிரிவு

# அதிபரின் அறிக்கை

## 45 ஆவது அகவையை நிறைவு செய்துள்ள இக்கல்லூரி தொடர்பில் பின்வரும் விடயங்களை தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

**01. மாணவர்கள் :**

எமது கல்லூரியின் மாணவர்களில் 72% வீதமானவர்கள் அயல்புற கிராமங்களிலிருந்து வருபவர்களாக உள்ளனர். போக்குவரத்து நெருக்கடி பாடசாலை நிறைவடைந்த பின் மீளவும் பாடசாலைக்கு வருகை தர முடியாதவர்களாகவும் போக்குவரத்து தேவைக்காக அதிக பணத்தை செலவிடுபவர்களாகவும் காணப்படுகின்றனர். இன்னும் சிலர் வாடகை வீடுகளில் தங்கியிருந்து தாய் தந்தையரின் அரவணைப்பின்றி மேற்பார்வையின்றி பாடசாலைக்கு வருபவர்களாகவும் உள்ளனர். இவர்களில் சிலர் பாடசாலையின் ஒழுக்க விழுமியங்களை மீறுவதிலும் தங்களது நடத்தைப் பாங்கை கல்லூரிக்கு பொருத்தமற்ற விதத்தில் மாற்றியமைக்க விருப்பமுள்ளவர்களாகவும் உள்ளனர்.

**02. பெற்றோர்கள் :**

இவர்களில் 73% வீதத்தினர் அயற் கிராமங்களைச் சேர்ந்தவர்களாவர். குறைந்த வருமானமுடைய, அரச தொழில் அற்றவர்களாகவும் அன்றாடம் கிடைக்கும் ஊதியத்தில் வாழ்பவர்களாகவும் உள்ளனர். இவர்களின் கல்வியறிவு மாணவர்களின் மீட்டல் செயற்பாட்டை அவதானிக்கும் அளவுக்கு போதுமானதாக இல்லை பாடசாலையுடன் நிதி தொடர்பான அபிவிருத்திப் பணிகளில் பங்கெடுக்க முடியாதவர்களாகவும் உள்ளனர். இருப்பினும் கல்லூரிக்கான உதவிகளை அவர்கள் செய்து வருவது சிறப்பாகும்.

**03. பழைய மாணவர்கள் :**

2023 இக் கல்லூரியின் தரவுகளின்படி பழைய மாணவர்கள் 8000 உள்ளனர் இவர்களில் பெரும்பாலானவர்கள் கிராமப்புற பாடசாலைகளில் கல்வி கற்று உயர் கல்விக்காக இங்கு வந்தவர்களாக உள்ளனர் அவர்களின் மனப்பாங்கு இப் பாடசாலையுடன் இணைந்ததாக இல்லை பாடசாலையை விட்டு வெளியேறியதும் எந்தவித தொடர்பும் அற்றவர்களாகவும் உள்ளனர். இப்பாடசாலையில் அதிகளவு பௌதிக வசதிகளின் குறைபாடு காணப்பட்ட போதும் இதை வசதியான பாடசாலையாக கருதுவதால் உதவி அளிப்பதில் அக்கறை காட்டுவதில்லை.

45 வருடகாலத்தில் பழைய மாணவர்கள் தமது கல்லூரி என்பதை மறந்தவர்களாகக் காணப்படுகின்றனர். அதிபர்கள் மாறினாலும் பழைய மாணவர்கள் என்பவர்கள் பாடசாலைக்கே உரித்தானவர்கள் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

தொடர்ந்து வந்த அதிபர்கள் பாடசாலையை பாதுகாத்து வளர்த்தெடுப்பதில் முக்கிய பங்காற்றியுள்ளனர்.
இக்கல்லூரியில் கல்வி கற்றவர்கள் உயர் கல்வி பெற்றவர்களாகவும், உயர் பதவியில் ஈடுபடுபவர்களாகவும் உள்ள போதும் பாடசாலையுடன் இணைந்தவர்களாக இல்லை. வெளிநாடுகளில் சில பாடசாலைகளுக்கு கிளைகள் உள்ளன. ஆனால் இப்பாடசாலைக்கு அவ்வாறான கிளைகள் இருப்பதாக தெரியவில்லை என்பதுடன் அப்படி இருந்தாலும் கல்லூரியுடன் தொடர்பு உள்ளவர்களாகவும் இல்லை. இந்நிலை மாற்றப்பட்டு இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு இவர்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும் என எதிர்பார்க்கின்றேன்.

**04. ஆசிரியர்கள் :**

ஆசிரியர்கள் ஆரம்பம் முதல் கல்லூரியின் வளர்ச்சியில் பாரிய பங்களிப்பை செய்துள்ளனர். அந்த வகையில் தற்போது காணப்படும் ஆசிரியர் குழாம் அர்ப்பணிப்புடன் சேவை செய்கின்றனர். அதிபருக்கு மதிப்பளித்து மாற்றுக் குழுக்கள் உருவாக்காமல் இருப்பதும் கொடுக்கப்படும் சேவைகளை சிறப்பாக செய்து முடிப்பதும் இணைப்பாட விதான செயற்பாடுகளில் ஈடுபடுவது, மேலதிக நேரத்தை பாடசாலைக்காக செலவழிப்பது, மாலை நேர இரவு நேர மேலதிக வகுப்புகளை நடத்துவது என பல்வேறு சேவைகளை அர்ப்பணிப்புடன் செய்து வருகின்றனர். இவ்வாசிரியர்கள் இக்கல்லூரியில் கடமையாற்றுவது பெரும் பேறாகும். அதிபரால் விடுக்கப்படும் பாடசாலை தொடர்பான கோரிக்கைகளை ஏற்று நேரம் காலம் பாராது மறுப்பு தெரிவிக்காமல் நிர்வாகத்துடன் இணைந்து பல ஆசிரியர்கள் செயற்படுகின்றனர்.
சிறந்த அர்ப்பணிப்புடைய ஆசிரியர்கள் இப்பாடசாலையில் சேவையாற்றுவது சிறப்பம்சமாகும். ஆசிரியர்களுக்கு இடையிலான குழுக்களோ அதிபருக்கு எதிரான செயற்பாடுகளோ இல்லாது இருப்பது சிறப்பாகும். எந்தவொரு விடயத்தையும் தட்டிக் கழிக்காமல் உடனடியாக நிறைவேற்றும் மனப்பாங்கு அவர்களிடம் உள்ளமை பாராட்டத்தக்கதாகும்.

**05. அதிபர்கள் :**

இக்கல்லூரியில் 10 அதிபர்கள் கடமையாற்றியுள்ளனர். இவர்களில் 16 வருடங்கள் நீண்ட காலம் சேவையாற்றியவர் திரு.S. நவரெத்தினம் அவர்கள் தான் இக்காலத்தில்
ஆசிரியர்கள் இப் பாடசாலை நோக்கி நகர்வதும் மாணவர்கள் இப் பாடசாலையில் படிப்பதற்கு தூண்டப்படுவதும் வெளியே செல்லப் பயந்த காலமும் அது மக்கள் நகரை நோக்கி இடம் பெயர்ந்து வாடகை வீடுகளில் தற்காலிகமாக குடியேறி பயந்து பயந்து வாழ்க்கை நடத்திய காலம் பிள்ளைகள் இக்கல்லூரியிலேயே கற்க வேண்டும் என்ற நிலையும் ஆசிரியர்கள் நகர்ப்புறத்திலேயே தொழில் பார்க்க வேண்டும் என்ற நிலையும் இருந்ததால் எந்தவித தயக்கமும் இன்றி

பாடசாலை நடாத்த முடிந்தது. அதிபரின் கருத்துக்களை மீறவோ தமது கருத்துக்களை வெளிக்காட்டவோ முடியாத சூழல் அது.

பௌதிக வளங்களும் நிதியும் வடக்கு கிழக்கு மாகாண சபையிடம் காணப்பட்ட போதும் வெளியிடங்களில் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ள முடியாத நிலையிருந்தது. ஒதுக்கப்பட்ட நிதிகள் கல்வி அமைச்சு மாகாண கல்வித் திணைக்களம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிலும் தேங்கி கிடந்தது அவற்றை இப் பாடசாலை நோக்கி இவரால் திசை திருப்ப முடிந்தமை பாராட்டுக்கரியது. இதனால் இப்பாடசாலைக்கான பௌதிக வளங்களை இலகுவாக தேட முடிந்தது. அதன் பின்னர் வந்த அதிபர்கள் சில மாதங்களோ அல்லது சில வருடங்கள் மட்டுமே கல்லூரியை வழிநடத்தினர். இக்காலப்பகுதியில் பாரிய அளவில் பௌதிக அபிவிருத்திகள் நடைபெறவில்லை.

## 06. மாணவ தலைவர்கள் :

மாணவத் தலைவர்கள் வருடம் தோறும் தெரிவு செய்யப்பட்டு அவர்களின் பணி பாடசாலைத் தேவைக்கேற்ப மேற்கொள்ளப்பட்டாலும் அர்ப்பணிப்பு என்பது விசுவாசமும் எமது பாடசாலை என்ற மனப்பாங்கும் குறைவடைந்து வருவதுடன் நேரத்துக்கு வருவது சுயமாக கடமையில் ஈடுபடுவது என்பது பெரும்பான்மையானோரிடம் காணப்படும் குறைபாடாகும் மேலதிக வகுப்புகளுக்கு வழங்கப்படும் முக்கியத்துவமும் பெற்றோரின் வற்புறுத்தலும் டியூஷன் வகுப்புகளின்பால் ஈர்க்கப்படுவதால் மாணவத் தலைவர்களின் செயற்பாடுகள் தேவைக்கேற்ற வகையில் இல்லாமல் வசதிகளுக்கேற்றது என்ற நிலை மாறி உள்ளது

ஆசிரியர்கள், மாணவர்களிடத்தே கண்டிப்பை பயன்படுத்தி ஒழுக்கத்தை பேண முடியாத நிலை ஏற்பட்டிருக்கும் போது ஆசிரியர்களால் மாணவர்களை கட்டுப்பாட்டுடன் வைத்திருக்க முடியும் என்ற எதிர்பார்ப்பை தளர்த்த வேண்டி உள்ளது.

## 07. அரசியல்வாதிகள் :

கல்லூரியின் சூழலில் வசிக்கின்ற அரசியல் சார்ந்தவர்கள் பாடசாலைக்கு பல உதவி புரிந்தவர்களாக இருக்கின்றனர். நகர சபையின் உறுப்பினர்கள் 4 பேர் உவர்மலை பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாக இருந்து உதவி புரிந்திருக்கிறார்கள் ஆளுநர் அலுவலகத்திற்கு முன்னர் இருந்த காணியை நிர்வாகம் பாடசாலைக்கு உரித்தாக்கிக் கொள்ள எடுத்த முயற்சி பலனளிக்கவில்லை. கல்லூரியின் நலன் கருதிக் காணியை பெற்றுக்கொள்ளும் இம்முயற்சியை தொடர்ந்து மேற்கொண்டு அவ்விளையாட்டு மைதானம் பாடசாலைக்கு கிடைக்க ஆவண செய்ய வேண்டும்.

## 08. முகப்புத்தகப் பதிவுகள் :

நகர்ப்புறத்தில் இக்கல்லூரிக்கு முன்பதாக தோற்றம் பெற்ற நீண்ட கால வரலாறு உடைய பாடசாலைகள் பல காணப்படுகின்றன. ஆனால் அவை தொடர்பான

குற்றச்சாட்டுக்கள் முகப்புத்தகங்களில் வெளிவருவதில்லை. அவை நிர்வாகத்திற்கு நேரடியாக தெரிவித்து நிவர்த்தி செய்யப்படுகின்றன. பதிலாக குற்றச்சாட்டுகளை சொல்பவர்களுக்கு எதிராக பழைய மாணவர்களும் பெற்றோர்களும் இணைந்து சரியான விடயங்களை தெளிவுபடுத்துகின்றனர்.

ஆனால் இக்கல்லூரி தொடர்பில் எந்தவித ஆதாரமும் இல்லாத பொருத்தமற்ற பதிவுகள் இடுவதும் அவை தொடர்பில் பலர் கல்லூரியை இழிவு படுத்தி பதிவிடுவதும் வழமையாகி விடுகின்றது தாங்கள் கல்வி கற்ற அல்லது தமது பிள்ளைகள் கல்வி கற்கும் பாடசாலை விடயங்கள் நிர்வாகத்துடன் நேரடியாக தொடர்பு கொண்டு சீர் செய்யமுனைவதே சிறப்பாகும்.
நிர்வாகத்தில் இருப்பவர்கள் துறைமுகத்துக்கு வரும் கப்பல் போன்றவர்கள் வருவார்கள் போவார்கள் பாடசாலை என்பது பழைய மாணவர்களினதும் பெற்றோர்களினதும் சமூகத்தினரும் சொத்தாகும் அதனை பாதுகாப்பதும் பொருத்தமானதாகும்.

### 09. வசதியான பாடசாலை என்ற மனப்பாங்கு :

பழைய மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களிடம் இப்ப பாடசாலை வசதியான பாடசாலை என்ற மனப்பாங்கு இருப்பதால் அவர்களின் உதவிகள் இப் பாடசாலை நோக்கி வருவதில்லை உண்மை அதுவல்ல பல்வேறு பௌதிக வள குறைபாடுகள் இப்பாடசாலையில் உண்டு என்பதே உண்மை.

### 10. பாடசாலையின் பரப்பும் கட்டிடங்களும் :

பாடசாலையின் காணி ஒழுங்கற்ற பிரதேசமாகவும் பரந்த இடமாகவும் கட்டிடங்கள் ஏற்ற இறக்கம் கொண்டதாகவும் காணப்படுகின்றது. அத்துடன் இதில் அமைந்துள்ள கட்டிடங்கள் வெவ்வேறு பிரதேசங்களில் இருப்பதால் அதிபரால் நேரடிக் கண்காணிப்பில் வைத்திருக்க முடியாத சூழல் காணப்படுகிறது. ஒரு பிரதேசத்தில் இருந்து இன்னும் ஒரு பிரதேசத்தை நேரடியாக கண்காணிக்கும் வகையில் கட்டிடங்கள் அமைக்கப்பட்டிருக்கவில்லை தொழில்நுட்ப பிரிவு, ஆரம்ப பிரிவு என்பன தனி பிரதேசங்களாக இயங்குகின்றன. காணியின் மத்தியில் செயற்பாட்டறை காணப்படுவதால் அலுவலக பகுதியில் இருந்து நேரடியாக அப்பகுதியை கண்காணிக்க முடியாதுள்ளது. இக்கட்டிடம் அகற்றப்பட்டு மத்திய பகுதி வெறுமையாக்கப்பட வேண்டும்.

### 11. பாடசாலையின் விடுதி :

கல்லூரிக்கான விடுதி நிர்மாணிக்கப்பட்டு அது செயற்பட்டுக் கொண்டிருந்தாலும் அதற்கான முறைப்படியான அனுமதியோ அல்லது ஆளணி வளங்களோ ஒதுக்கீடு செய்யப்படவில்லை அதற்காக முயற்சித்த போதும் அது தற்போதைய நிலையில்

ஒழுங்கமைக்கப்பட முடியாத ஒன்றாக காணப்படுகின்றது தற்போதைய நிலையில் செயலாளர் மற்றும் வலயக்கல்வி பணிப்பாளரின் அனுமதியுடன் திருகோணமலை மாவட்ட நலம்புரிச்சங்கம் கடந்த மூன்று வருடங்களாக கிராமப்புறங்களில் இருந்து கற்றல் வசதியற்ற மாணவர்களில் உள்வாங்கி சகல வசதிகளையும் வழங்கி நிர்வகித்து வருகின்றது. மேலதிக வகுப்பு வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேற்பார்வை நடவடிக்கைகளை பாடசாலை நிர்வாகம் மேற்கொண்டு வருகின்றது.

**12. நூலகக் கட்டிடம் :**

கல்லூரியின் காணியில் கல்வி அமைச்சால் நூலகத்திற்கு என கட்டப்பட்ட மூன்று மாடி கட்டிடம் தற்போது மாகாண கல்வித் திணைக்களத்தின் பாவனையில் உள்ளது. இக்கட்டடம் அமைக்கப்படும் போது ஐந்து வருடங்களுக்கு கட்டடத்தின் ஒரு தளத்தை கல்லூரி பயன்படுத்தலாம் என்றும் பின்னர் அது பாடசாலைக்கு முழுமையாக கையளிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் கல்வி அமைச்சும் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கு அமைய காணி வழங்கப்பட்டது. இருப்பினும் இதுவரை இக் கட்டிடம் மீள ஒப்படைக்கவில்லை. காலம் காலமாக இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் போதெல்லாம் ஒரு கட்டிடம் கட்டப்பட்ட பின் மீள கையளிப்பதாக பல கடிதங்கள் மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் வழங்கியுள்ளனர். 2022 ஆம் ஆண்டும் இவ்வாறான கடிதம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

இக்கட்டிடம் மீளப் பெறப்பட்டு பாடசாலை பயன்படுத்துவதற்கு மீள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் இது தொடர்பான ஆவணங்கள் இந்நூலில் இணைக்கப்பட்டுள்ளது.

**13. பாடசாலை அபிவிருத்திச் சங்கம் :**

பாடசாலை அபிவிருத்தி சங்கம் பாடசாலைக்கு ஒத்துழைத்து பாடசாலை வளர்த்தெடுப்பதில் பூரண பங்களிப்பை செய்து வருகின்றது. இருப்பினும் பாடசாலை இணைந்து செயல்படும் அங்கத்தவர்கள் பொதுக்கூட்டங்களின் போது நிர்வாகத்தால் மேற்கொள்ளப்படும் விடயங்களுக்கு அனுமதி வழங்குவதும் திருத்தம் செய்வதிலும் ஆர்வம் காட்டி வருகின்றார்களே தவிர பாடசாலை அபிவிருத்திக்காக சிறப்பான புதிய செயல் திட்டங்களை முன்மொழிந்து அவர்களாகவே கல்லூரியில் நடைமுறைப்படுத்துவதற்கு முன் வருவதில்லை பொதுக்கூட்டங்களின் போது நிர்வாகக் குழுவை வலுப்படுத்தி அவர்கள் ஊடாக பாடசாலை அபிவிருத்தி செய்வதற்கான நேரடி பங்களிப்பை வழங்கக்கூடிய முன்மொழிவுகள் செய்து அதனை தாமாக நிர்வாகத்துடன் இணைந்து நடைமுறைப்படுத்த முன் வர வேண்டும்

**14. பல்கலைக்கழக மாணவர்கள் :**

இக்கல்லூரியில் கல்வி கற்று பல்கலைக்கழகத்திற்குச் சென்ற மாணவர்கள் மீளவும் இக்கல்லூரி தொடர்பில் எந்தவிதமான தொடர்பும் அற்றவர்களாக காணப்படுகின்றனர். 5 வருடங்களில் ஒருவருக்கு மேற்பட்ட பல மாணவர்கள் பரிசளிப்பு விழாவின்

போது கௌரவிக்கப்பட்டிருந்தார்.∴ தங்களாகவே குழுக்கள் உருவாக்கியோ அல்லது தனியாகவோ கல்லூரிக்கு உதவ முன் வரவில்லை. அல்லது தொடர்பு படவும் இல்லை இக்கல்லூரியின் வளர்ச்சி மேற்கொள்ளும் வகையில் உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ பழைய மாணவர்களை உள்ளடக்கியதாக உத்தியோக பூர்வ பழைய மாணவர் சங்கத்தை விட வேறு எந்த கிளைகளும் அமைக்கப்படவில்லை. அப்படியிருந்தாலும் கல்லூரியோடு தொடர் பட்டு செயல்படவும் இல்லை.

இந்நிலை மாற்றப்பட்டு கல்லூரியின் வளர்ச்சியில் இவர்கள் அனைவரும் இணைந்து செயல்படுவது பொருத்தமானதாக அமையும்.

## 15. கலையரங்கு :

கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள கலையரங்கு மாணவர்களுக்கு மிகுந்த பாயனுடையதாக அமைந்துள்ளதுடன் திருகோணமலை மாவட்டத்தில் இவ்வாறான கலையரங்கு ஒன்று மட்டுமே பாடசாலை என்ற அடிப்படையில் சிறப்பானதாக உருவாக்கப்பட்டுள்ளது.

இது கல்வியோடு தொடர்புடைய நிறுவனங்களும், அரச நிறுவனங்களும் மற்றும் தனியாரும் பயன்படுத்துவது கல்லூரிக்கு மிக இடைஞ்சலான விடயமாகும் கல்லூரி நாட்களில் திணைக்களம் சார் நிகழ்வுகள் இடம் பெறுவது கல்லூரி நடவடிக்கைகளுக்கு இடைஞ்சலாக அமைவதுடன் நிர்வாகத்தினரும் அந்நிகழ்வுக்கான ஏற்பாடுகளில் ஈடுபட வேண்டியிருப்பது பாடசாலை நடவடிக்கைகளுக்கு இடையூறாக அமைகின்றது கல்லூரியின் ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி சாரா ஊழியர்கள் என பலரும் இதில் கலந்துகொண்டு உதவியை வழங்க வேண்டி இருப்பதால் மிகுந்த சிரமங்கள் ஏற்படுகின்றன.

இதற்கு அதிபர்களால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டாலும் அவற்றையும் மீறி நிகழ்வுகள் நடைபெறுவது கவலைக்குரியதாகும் இந்நிலமை மாற்றப்படுத்தல் அவசியம்.

## 16. தேவைகள் :

இப்படசாலையில் விளையாட்டு மைதானம், கட்டிடப் பற்றாக்குறை, தளபாடப் பற்றாக்குறை, ஆளணி பற்றாக்குறை என்பன காணப்படுகின்றன. மாணவர்களின் விளையாட்டு துறையை வளர்த்தெடுப்பதற்கு தினமும் பயிற்சியில் ஈடுபடுவதற்கு ஏற்ற மைதானம் பாடசாலையுடன் இணைந்ததாக இல்லாதது பெரும் குறைபாடாக உள்ளது. அதேவேளை வகுப்பறை பற்றாக்குறை பெரும் பிரச்சனையாக உள்ளது. தெரிவுப் பாடங்களுக்கான வகுப்பறை வசதிகள் இன்னும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை அதேபோல ஒவ்வொரு சமயம் சார்ந்தவர்களுக்கான வகுப்பறைகள் இல்லாது உள்ளது. அத்துடன் ஆசிரியர் பற்றாக்குறையும் காணப்படுகிறது.

**17. நிதி விடயம் :**

இக்கல்லூரியின் வளர்ச்சிக்காக பாடசாலையின் அவசிய தேவை கருதி பெற்றோரால் வழங்கப்படும் சுற்று நிருபத்திற்கு அமைவாக பெறப்படும் சட்ட ரீதியான நிதிகளே பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

நிதி விடயங்கள் கையாள்வதற்கு நிரந்தரமாக ஒருவர் இல்லாமல் இருப்பது குறைபாடாகும், பொருளாளராக இருக்கும் ஆசிரியர் பாடங்களையும் கற்பித்து நிதி தொடர்பான விடயங்களையும் கையாள்வது மிகச் சிரமமாகும். இவ்விடயத்தை சீர் செய்ய கல்லூரி அதிபர்கள் காலத்தை வீணடிக்க வேண்டியுள்ளது.

**18. பெறுபேறுகள் :**

கல்லூரியின் பெறுபேறுகள் உச்ச மட்டத்தில் காணப்படுவதுடன் கடந்த ஆறு வருடத்தில் கல்லூரி பெற்றுக் கொண்ட பெறுபேறு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, கா.பொ.த சாதாரண பரீட்சை, க.பொ.த உயர்தர பரீட்சை என்பவற்றில் 45 வருட வரலாற்றில் உச்ச பெறுபேறு வீதமாக உள்ளது இதற்கு ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவை காரணமாக இருந்துள்ளது.

**19. இணைப்பாட விதானச் செயற்பாடுகள் :**

வருடாந்தம் இக் கல்லூரியில் இருந்து அதிகமான மாணவர்கள் மாவட்ட, மாகாண, தேசிய சாதனைகளைப் பெற்றுள்ளனர். இவ்வருடமும் ஆறு நிகழ்வுகளில் தேசிய வெற்றிகள் கிடைத்துள்ளதுடன் எமது மாணவர்கள் தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் பங்கு பற்றி 8 இடங்களில் வெற்றி பெறுவதற்கும் வாய்ப்புக் கிட்டியது. நடனம், சங்கீதம் , விளையாட்டு ஆசிரியர்கள் , விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள் கடினமாக உழைத்தனர்.

**20. மாணவர் அனுமதி :**

மாணவர் அனுமதிக்காக விண்ணப்பிக்கின்றவர்களின் தொகை அதிகரித்திருக்கின்றது 2024 ஆம் ஆண்டில் முதலாம் தரத்திற்கு அனுமதிக்கப்படக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை 105 ஆகும். இருப்பினும் 245 விண்ணப்பங்கள் கிடைத்தன. அதேவேளை கா.பொ.த உயர்தரத்திற்கு அனுமதிக்கக் கூடிய மாணவர் எண்ணிக்கை 160 ஆகும் இருப்பினும் 326 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன இவை கல்லூரியின் வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக அமைகின்றன.

**21. தொழிநுட்ப வளர்ச்சி :**

கணினி ஆய்வு கூடம், பல்லூடக அறை, சுகாதார, புத்தாக்க ஆய்வு கூடம், சகல கட்டிடங்களுக்குமான Wifi வசதி, C.C.T.V கமரா வசதிகள், ஸ்மார்ட் போர்ட் வசதிகள் மற்றும் இணைய வசதிகள் என்பன ஏற்படுத்தப்பட்டு மாணவர்களின் கற்றல் மற்றும் பாதுகாப்புக்கு வசதியளிக்கப்பட்டுள்ளது.

**22. சிற்றூழியர்கள் :**

சிறந்த அர்ப்பணிப்புடைய சிற்றூழியர்கள் காணப்படுவது சிறப்பாகும் காலம் நேரம் பாராது சேவையாற்றும் இயல்பு கொண்டவர்களாகவும் தமக்கு கொடுக்கப்பட்டுள்ள பணியை செவ்வனே செய்யக்கூடியவர்களாகவும் காணப்படுகின்றனர் மேலதிக நேரத்தை செலவழித்து உதவக்கூடிய மனப்பாங்கு கொண்டவர்களாக காணப்படுகின்றனர்.

**23. இடர்காலம் :**

2018ம் ஆண்டில் ஏற்பட்ட சஹ்ரான் தொடர்பாக இடர்களின் போது மாணவர்கள் பாடசாலைக்கு வர அஞ்சினர். அதனைத் தொடர்ந்து கொவிட் - 19 தொற்று , 2020 , 2021 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற போது கல்வி நடவடிக்கைகள் முன்னெடுப்பதில் சிரமம் ஏற்பட்டதுடன் அடிக்கடி பாடசாலை மூடப்பட்டுள்ளது. இணையம் ஊடாக கற்றலில் மாணவர்கள் ஈடுபடுத்தப்பட வேண்டிய தேவை ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து 2022 இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி மாணவர்களின் கற்றலை பெரிதும் பாதித்ததுடன் மாணவர்களும், பெற்றோர்களும் , ஆசிரியர்களும் போக்குவரத்து சிரமங்கள், உணவுப் பிரச்சினைகளை எதிர் கொள்ள வேண்டி இருந்ததுடன் பெற்றோலியப் பொருட்களுக்காக எரிபொருள் நிலையங்களில் நாட்கணக்கில் வரிசையாக காத்துக் கிடக்க வேண்டிய கஸ்ர நிலைக்கு உள்ளாகினர். இவை மாணவர்களின் கற்றலில் தாக்கம் செலுத்தக் கூடியதாக அமைந்திருந்தது.

**24. முகாமைத்துவ உதவியாளர்கள் :**

இங்கு தேவைகளை கையாளவும், ஒழுங்குபடுத்தவும் முகாமைத்துவ உதவியாளர்கள் இல்லாமை பெரும் குறைபாடாகும். இவ்வேலைகளை பிரதி , உதவி அதிபர்களும் , அதிபரும் செய்ய வேண்டியிருப்பதால் ஒழுங்காக ஆவணப்படுத்துவது மேற்கொள்வது கடினமாக உள்ளது. ஏனைய 1AB பாடசாலைகளிலும், தேசிய பாடசாலைகளிலும் 10 இற்கு மேற்பட்டவர்கள் கடமை புரியும் போது இவற்றை இலகுவாக கையாள முடிகிறது. இங்கு அவ்வாறான நிலை இல்லாது இருப்பது அதிபர்களுக்கு சுமையான ஒன்றாக உள்ளது. இன்நிலை மாற்றப்பட வேண்டும்.

# தி / உவர்மலை விவேகானந்தா கல்லூரி

## பாடசாலை ஆரம்பித்த ஆண்டு முதல் நாளுக்கான சம்பவத்திரட்டு – 1978

1978.02.10 இன்று சுபநேரம் உவர்மலை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை என்ற பெயரோடு இப்பாடசாலை ஆரம்பிக்கப் பட்டுள்ளது. உவர்மலைவாழ் தமிழ் பெற்றோரது பிள்ளைகளின் கல்வியை நோக்காகக் கொண்டு இப்பகுதிப் பெற்றோரது கடும் உழைப்பாலும் நிதியுதவியாலும் காரியாலய அறை உட்பட 70x20 விசாலமான உபநிரந்தரக் கட்டடம் அமைக்கப்பட்டது பாராட்டுதற்குரியது.

சம்பிரதாய முறைப்படி திருக்கோணமலை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. இரா. சம்பந்தன் அவர்கள் கட்டடம் திறந்து வைக்கப்பட்டது. பெருந்திரளான பெற்றோர்கள், (நான் உட்பட) கல்வி உத்தியோகத்தர்கள், உதவி அரசாங்க அதிபர் ஆகியோர் திறப்பு விழாவில் கலந்து சிறப்பித்தனர்.

பெற்றோரது ஆர்வத்தையும் பாடசாலையைப் பொறுப்பெடுத்த அதிபர் திரு. தங்கவேலு, ஏனைய ஆசிரியர்களது திறமைகளையும், உற்சாகத்தையும் பார்க்குமிடத்து இப்பாடசாலைக்கு நல்ல ஒரு எதிர்காலம் உண்டெனத் தென்படுகிறது. பாடசாலை பலவளங்களும் பெற்று வளரப் பாடசாலையை வாழ்த்துகின்றேன்.


பிரதம கல்வி அதிகாரி

0-02.1978. இன்று பிரதம கல்வி அதிகாரி அவர்களின் EC/1/TSA இலக்க 7-2-1978ம் திகதிய கடிதத்தின் பிரகாரம், அதிபராக கடமை ஏற்றுக் கொண்டேன்.

அதிபர்

# பாடசாலை தரவுயர்வு பெற்ற காலங்கள்.

- ❖ தரம் I (ஆரம்பப்பிரிவு) - 1978.02.10
- ❖ தரம் II (சாதரண தரம்) - 1984.01.01
- ❖ தரம் IC (கலை வர்த்தகப் பிரிவு) - 1991.05.01
- ❖ தரம் IAB (கணித விஞ்ஞானப் பிரிவு) - 1994.04.05
- ❖ தொழிநுட்பப் பிரிவு ஆரம்பம் - 2017.01.01
- ❖ தேசிய பாடசாலையாக தரமுயர்வு - 2021.06.10


PROPOSED MASTER PLAN
LOCATION MAP
APPROCH ROAD TO SCHOOL
TO INNER HOBOUR ROAD
PROPOSED NEW THREE STOREY BLOCK (28M x 9M)
TO BE DEMOLISHED
2000GALLONS WATER TANK
NB - 1
NB - 2
NB - 3
EXB - 8
EXB - 12
EXB - 13
3 STOREY
STAGE
2 - STOREY
CENTRE ROAD
AUDITORIUM
QUARTERS
CHILDREN PARK
ROAD
FROM HOUSES
PROPOSED NEW TOILET

Tracing No: Tri/SG/TWG/2005/267


Section 1 of 1 Sections.

Scale 1 : 1000

# Tracing Showing the T/Orr's Hill Vivekananda College, Trincomalee

(As Built Survey and Contour Survey)

| | |
|---|---|
| Village | Trincomalee Div.No.12 Ward No.6, Sivan Kovil within the Urban Council Limits of Trincomalee |
| Minor Division | Trincomalee Town and Gravets |
| D.S. Division | Trincomalee Town and Gravets |
| District | Trincomalee |
| Province | Eastern |




Reference
- W : Wall
- WF : Wire Fence
- B : Bank
- RW : Retaining Wall
- U : Undefined
- G : Gate
- P : Permanent building
- (A) : Lot Numbers

Field Book Nos. E.D.M. 111/15-18

Boundaries pointed out by: S.Navaratnam
Boundaries pointed out to: Principal. T/Orr's Hill Vivekananda college

N.B. Lot A–Lot 1 in PP 157

| Lot No. | Name of land | Present land use | Claimants Name | Extent (Hec) |
|---|---|---|---|---|
| (A) | Orr's Hill | T/Orr's Hill Vivekananda College and Premises | State | 1.4630 |
| | | | Total | 1.4630 |


Surveyed & Drawn by: K.V.Krishnarajah, Govt. Surveyor

in August 2005

Checked by: P.Sivananthan, Asst. Supdt. of Surveys, 2005–08–25

Certified by: Kirthi Dissanayaka, Supdt. of Surveys Trincomalee District, 2005–08–27

# LAY OUT PLAN




| BUILDINGS | LENGTH | WIDTH | FLOOR |
|---|---|---|---|
| H – PRIMARY | 140 | 25 | 3 |
| I – OLD | 80 | 20 | 1 |
| F – SC LAB, GR – 6, BIO/ MATHS | 90 | 25 | 3 |
| E – LIBRARY, COMPUTER, MULDIMIDIA | 80 | 25 | 2 |
| B – COMMERCE, ARTS, GR – 7 | 90 | 25 | 3 |
| A – OFFICE. GR – 10 , GR – 11 | 90 | 25 | 3 |
| C – GR – 8, GR – 9 | 110 | 25 | 2 |
| D – DANCE, HEALTH & PHY.ED, DENTAL | 50 | 25 | 1 |
| RAJAMANNER MEMORIAL HALL | 29ft 7 inch | 25 | 1 |
| AUDITORIUM | 145ft | 82ft | 1 |
| CANTEEN | 32ft 5 inch | 13ft 4 inch | 1 |
| G – ACTIVITY ROOM | 42ft | 25ft 10 inch | 1 |
| PRIMARY BOYS BARTHROOM | 18ft 4 inch | 26ft | 1 |
| J – HOSTEL | 135 | 18 | 3 |
| K – TECHINOLOGY UNIT , SIVAN KOVIL | 70 | 30 | 2 |

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு
උතුරු - නැගෙනහිර පළාත් අධ්‍යාපන, සංස්කෘතික කටයුතු සහ ක්‍රීඩා අමාත්‍යාංශය
*MINISTRY OF EDUCATION, CULTURAL AFFAIRS & SPORTS, NORTH - EAST PROVINCE*

திருகோணமலை ත්‍රිකුණාමලය **Trincomalee**

*6 - 20035 (Secretary) 026 – 22176 (General) 026 – 22730 (Fax) E-mail : edunep@sltnet.lk*

எங்கள் இல. / මගේ අංකය / My No.
உங்கள் இல. / ඔබේ අංකය / Your No.
**Date: - 2004.06.04**

---

அதிபர்
தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி,
திருகோணமலை.

<u>கல்விப்பணிப்பாளர் அலுவலகத்துக்கான மேலதிகக் கட்டிடம்</u>

மேற்படி விடயம் தொடர்பாக தங்களுடனும் தங்களது பாடசாலை அபிவிருத்தி சங்கத்துடனும் ஏற்கனவே உரையாடல் என்னால் நடத்தப்பட்டுள்ளது.

02) இவ்வுரையாடலில் குறிப்பிட்ட கட்டிடத்தை தங்கள் பாடசாலை ஆசிரியர் விடுதி அமைந்துள்ள காணியில் கட்டுவதென்றும் இம்மும்மாடிக் கட்டிடத்தில் ஒருமாடியை பாடசாலையின் விடுதி / அலுவலக தேவைகளுக்காக பயன்படுத்துவதென்றும் ஐந்து(5) வருடங்களின் பின்னர் முழுமையாக பாடசாலைக்கு வழங்குவதென்றும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

03) எனவே இதனடிப்படையில் இக்காணியை வழங்க தங்கள் ஒப்புதலை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

...HIAGALINGAM
SECRETARY
...Y OF EDUCATION
...AL AFFAIRS & SPORTS
...ST PROVINCE

ஆர்.தியாகலிங்கம்
செயலாளர்.

TRUE COPY CERTIFIED CORRECT
Mr.K.RAVITHAS
Principal
T/Orr's Hill Vivekananda College
Trincomalee.

வலயக் கல்வி அலுவலகம் - திருகோணமலை
කලාප අධ්‍යාපන කාර්යාලය - ත්‍රිකුණාමලය
ZONAL EDUCATION OFFICE - TRINCOMALEE
கடல்முக வீதி, திருகோணமலை Sea View Road, Trincomalee මුහුදු වෙරළ පාර, ත්‍රිකුණාමලය

My No: T/ZEO/ADM/Gen Date: 29.10.2020

மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
மாகாணக் கல்வித் திணைக்களம்,
கிழக்கு மாகாணம்.

**மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் பயன்படுத்தப்படும் நூலகக் கட்டிடம் தொடர்பான விபரம்**

மேற்படி விடயம் தொடர்பான தங்களது EP/20/02/07/06/Gen இலக்க 2020.10.12ம் திகதிய கடிதம் சார்பாக,

மேற்படிக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி அதிபரினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டதற்கிணங்க அவதானிக்கப்பட்ட விடயங்கள் வருமாறு:

ஆவணம் 1.
வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சுச் செயலாளரினால் பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்ட 2004.06.04ம் திகதிய கடிதம். (இணைப்பு 1)

அவதானம்:
மேற்படிக் கடிதத்தின் பிரகாரம் குறித்த கட்டிடமானது வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சுச் செயலாளருக்கும், தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி அபிவிருத்திச் சங்கத்தினருக்கும் இடையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கமைய பாடசாலைக்குரிய காணியில் நிர்மாணிக்கப்பட்டு கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் பயன்படுத்தப்பட்டு வருகின்றமையும், குறித்த ஒப்பந்தத்தில் 05 வருடங்களின் பின்னர் முழுமையாக பாடசாலைக்கு ஒப்படைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரையில் கட்டிடம் மீளக் கையளிக்கப்படாதிருப்பதும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

ஆவணம் 2. பாடசாலைக் கட்டிட நிலஅளவை வரைபடப் பிரதி, உத்தேச முதன்மைத் திட்டத்திற்கான வரைபடப்பிரதி (இணைப்புகள் 2,3)

அவதானம்:

மேற்படி பாடசாலைக் கட்டிட வரைபடங்களின் பிரகாரம் குறித்த கட்டிடம் தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரிக்குரியது என்பது அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

ஆவணங்களைப் பரிசீலித்ததன் அடிப்படையில், குறித்த கட்டிடமானது பாடசாலைக்குரியதாக காணப்படுகின்றது. மேலும், தற்போது பாடசாலை மாணவர்களின் தொகை அதிகரித்துள்ளமையினாலும், மாணவர்களுக்கு நூலகம் மற்றும் கணினி வள நிலைய தேவைப்பாடு காணப்படுவதனாலும், இக்கட்டிடமானது பாடசாலையின் பிரதான கட்டிடத்திற்கும், தொழில்நுட்ப பிரிவுக் கட்டிடத்திற்கும் இடையே காணப்படுவதனால் அதனூடாக போக்குவரத்து செய்வதில் மாணவர்கள் சிரமத்தினை எதிர்நோக்க வேண்டியுள்ளமையினாலும் குறித்த கட்டிடத்தினை பாடசாலைக்கு வழங்குவதன் மூலம் பாடசாலையின் கல்விச் செயற்பாடுகளை மேலும் வினைத்திறனாக மேற்கொள்ளமுடியும் என்பதை தங்களுக்கு தயவுடன் அறியத்தருகின்றேன்.

சி. சிறீதரன்
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம்,
திருகோணமலை

பிரதி: 1. செயலாளர், கல்வி அமைச்சு, கி.மா.
2. அதிபர், தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி, திருகோணமலை
3. செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி

Zonal Director : 026-2222166
General T.P/Fax : 026-2222442
Accounts Branch : 026-2222041
Admin. Branch : 026-2222314
Planning Unit : 026-2227758
School Works Branch : 026-2220084
Web : www.trincozone.sch.lk
e-mail : tri@edudept.ep.gov.lk
C:\Users\admin\Desktop\letter head N.docx

# T/T/ORR'S HILL VIVEKANANDA COLLEGE
## NAME LIST – 2023

| S.No | Name | | S.No | Name |
|---|---|---|---|---|
| 01. | Mr. K .Ravithas | | 51. | Mr. V. Gnanendran |
| 02. | Mr. M. Pragash | | 52. | Mrs. K. Sarishkumar |
| 03. | Mrs. S. Kokuladasan | | 53. | Mr. Y. Mathankumar |
| 04. | Mrs. T. Vishnucumar | | 54. | Mr. A.R. Emiltaine |
| 05. | Mr. V. Mohanarajah | | 55 | Mrs. T. Vinoth anru |
| 06. | Mr. V. Sunthararajan | | | |
| 07. | Mrs. V. Gangatharan | | | **Primary Teachers** |
| 08. | Mrs. J. Vijithakumar | | 1. | Mrs. S. Karunaharan |
| 09. | Mr. P. Konalingam | | 2. | Mrs. S. Sureshkumaran |
| 10. | Mrs. C. Yuvarajkumar | | 3. | Mrs. V. Srikanthan |
| 11. | Mrs. S. Subani | | 4. | Mrs. T. Kaliraja |
| 12. | Mrs. P. Baskaranathan | | 5. | Mrs. M. Ravindran |
| 13. | Mrs. T. Gengatharan | | 6. | Mrs. M. Rajkumar |
| 14. | Mrs. R. Thayaparan | | 7 | Mrs. S. Nagenthiram |
| 15. | Mrs. A. Logeswaran | | 8. | Mrs. S. Anantharajan |
| 16. | Mrs. A. Kantharupan | | 9. | Mrs. P. Kamalanathan |
| 17. | Mrs. U. Subagini | | 10. | Mrs. T. Vignesh |
| 18. | Mrs. T. Ashok | | 11. | Mrs. K. Ramachandran |
| 19. | Mr. S. Thirumaran | | 12. | Mrs. Marystella Joel Gibson |
| 20. | Mrs. P. Umamahesan | | 13. | Mr. V. Jeyaseelan |
| 21. | Mr. S. Sivashankaran | | 14. | Mrs. S. Nawaskaran |
| 22. | Mrs. N. Nanthakumar | | 15. | Mrs. N. Anuskanth |
| 23. | Mr. B. Nirmalathasan | | | |
| 24. | Mr. R. Ketheeswaran | | | **GRADUCTE TRAINEES** |
| 25. | Mr. S. Baskaran | | 01. | Mrs. V.R.F. Marina |
| 26. | Mr. S. Mathan | | 02. | Mrs. T. Prashanthan |
| 27. | Mr. R. Mithunan | | | |
| 28. | Mr. K. Satheeskumar | | | **VOLUNTEER TEACHERS** |
| 29. | Mrs. T. Ranjanan | | 01. | Mr. V. Thuwaragan |
| 30. | Mrs. R. Jeyakanthan | | 02. | Miss. G. Joysile |
| 31. | Mrs. K. Jeyabalini | | 03. | Mr. K. Sathurshan |
| 32. | Mrs. V. P. Birunthuja | | 04. | Mr. C. Rohanaprashanth |
| 33. | Mrs.S. Baheerathy | | | **NON ACADEMIC** |
| 34. | Mrs. S. Subas | | 01. | Mr.P.Yoganantham |
| 35. | Mrs. D. Srikanthan | | 02. | Mr.S.Shanthakumar |
| 36. | Mrs. K. Vijayakumar | | 03. | Miss.S.Valli |
| 37. | Mr. T. Rajkamal | | 04. | Mr.R.Kirubairaja |
| 38. | Mrs. S. Thushyanthan | | 05. | Mrs.A. Vivekananth |
| 39. | Mr. N. Jeyapragash | | 06. | Mr.G.Edward |
| 40. | Mr. K. Sivakalithas | | | **COMPUTER ASSISTANT** |
| 41. | Mrs. M. Sivanesan | | 01. | Mrs. S. Vithiyakumary |
| 42. | Mrs. M.Anantha Manokaran | | 02. | Mrs. S. Kamalini |
| 43. | Mrs. T. Nikethan | | | **COACH** |
| 44. | Mrs. G. Sutharshini | | 01. | Mr. S. Sasiyananthan |
| 45. | Mr. S. Thillainathan | | 02. | Mr. Paviprashanth |
| 46. | Mr. A.M. Mujahith | | | |
| 47. | Mrs. A. Nagalingam | | | **TRAINEES** |
| 48. | Mrs.V. Thusan | | 01 | Misss. S. Thiravya |
| 49. | Mrs. J.Devadas | | 02 | Miss. K. Divashini |
| 50. | Mrs. G. Nalinakanthan | | 03 | Miss. S. Brimine |



அதிபர், ஆசிரியர் குழாம்

| T / ORR'S HILL VIVEKANANDA COLLEGE | |
|---|---|
| **Student population - 2023** | |
| **Grade** | **Total** |
| 1 | 111 |
| 2 | 107 |
| 3 | 89 |
| 4 | 115 |
| 5 | 113 |
| **Total 1-5** | **535** |
| 6 | 115 |
| 7 | 136 |
| 8 | 122 |
| 9 | 147 |
| 10 | 152 |
| 11 | 131 |
| **Total 6-11** | **803** |
| 12 ( 2025 ) | 204 |
| 13 ( 2024 ) | 130 |
| 13 ( 2023 ) | 132 |
| **Total 12-13** | **466** |

| | |
|---|---|
| **FULL TOTAL** | **1804** |

## தி / உவர்மலை விவேகானந்தா கல்லூரி

### பிரதேச ரீதியாக மாணவர்கள் - 2023

| | மாணவர்கள் | | | பெற்றோர்கள் | |
|---|---|---|---|---|---|
| தரம் | எண்ணிக்கை | உவர்மலை மற்றும் திருகோணமலை நகரில் வசிப்போர் | வேறு இடங்களில் வசிப்போர் | அரச ஊழியர்கள் | ஆரச ஊழியர்கள் இல்லாதவர்கள் |
| 1 | 111 | 30 | 81 | 16 | 95 |
| 2 | 107 | 30 | 77 | 16 | 91 |
| 3 | 89 | 24 | 65 | 17 | 72 |
| 4 | 115 | 17 | 98 | 26 | 89 |
| 5 | 113 | 20 | 93 | 26 | 87 |
| 6 | 115 | 26 | 89 | 34 | 81 |
| 7 | 136 | 31 | 105 | 31 | 105 |
| 8 | 122 | 56 | 66 | 28 | 94 |
| 9 | 147 | 43 | 104 | 47 | 100 |
| 10 | 152 | 53 | 99 | 32 | 120 |
| 11 | 131 | 39 | 92 | 36 | 95 |
| 12 (2025) | 204 | 63 | 141 | 100 | 104 |
| 12 (2024) | 130 | 30 | 100 | 39 | 91 |
| 13 (2023) | 132 | 42 | 90 | 36 | 96 |
| மொத்தம் | 1804 | 504 | 1300 | 484 | 1320 |
| வீதம் | | 28% | 72% | 27% | 73% |

# தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி
# (தேசிய பாடசாலை)
# கல்லூரி வளர்ச்சிப் பாதையில் 1978 – 2023

திருகோணமலை நகரத்தின் மத்திய பகுதிக்குள் நுழைகின்ற வாயிலில் முப்புரமும் கடலால் சூழப்பட்டு இயற்கை எழில் கொஞ்சும் வனப்போடு உயர்ந்து நிற்கும் உவர்மலை மண்ணிலே, நிமிர்ந்த நடையோடும் நெஞ்சுறுதியோடும் வீறுநடை போட்ட சுவாமி விவேகானந்தரைப் போன்று நிமிர்ந்து நேர் கொண்ட பார்வையோடும் கண்ணகி அம்பாளின் அருளோடும் எங்கள் உவர்மலை விவேகானந்தா கல்லூரி கல்வி, ஒழுக்கம், தூய்மை என்ற மகுடவாசகத்தை இலக்காகக் கொண்டு இன்று தனது நாற்பத்தைந்தாவது அகவையில் தலை நிமிர்ந்து நடைபோடுகின்றது.

எமது கல்லூரியின் ஸ்தாபகர் அமரர் திரு.வி.வேலுப்பிள்ளை அவர்கள் உவர்மலை வாழ் மக்களின் பிள்ளைச் செல்வங்களுடைய எதிர்காலம் உன்னதமாக அமைய வேண்டும் எனும் இலட்சிய நோக்கோடும் உயரிய சிந்தனையோடும் அடர்ந்த காடாகக் கிடந்த நிலத்தை உவர்மலை மக்களின் பேராதரவுடன் செப்பனிட்டு தமது அயராத முயற்சியினாலும் கடின உழைப்பினாலும் $70' \times 20'$ கட்டிடத்தை கட்டி தென்னங் கிடுகினால் கூரையிட்டு அறிவொளியைப் புகட்டும் ஆலயமாக உவர்மலை தமிழ் வித்தியாலயம் எனும் நாமம் சூட்டி 1978ம் வருடம் மாசித் திங்கள் 10ம் திகதி 97 மாணவர்களுடனும் 04 ஆசிரியர்களுடனும் திரு.V.தங்கவேல் அவர்களை முதலாவது அதிபராகக் கொண்டு இன்றைய பாராளுமன்ற கௌரவ உறுப்பினர்.இரா.சம்பந்தன் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போது(1978) அவர்களால் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டு திரு.வி.வேலுப்பிள்ளை அவர்களினால் அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டது. இக்கல்லூரியின் உருவாக்கத்திற்கு கல்லூரி ஸ்தாபகர், உவர்மலை மக்கள், கிராம அபிவிருத்திச் சங்கம், அதிபர்.V.தங்கவேல், உதவி அரசாங்க அதிபர் ஸ்ரீ.வே.சாம்பசிவ ஐயர் போன்றோரும் இவர்களோடு ஒன்றிணைந்து இன்னும் பல நலன் விரும்பிகளும் உழைத்த உழைப்பு காரணமாயிற்றென எமது கல்லூரியின் பல இதழ்களிலும் பதிவிலிடப்பட்டு நினைவு கூரப்படுகின்றது.

பாடசாலையில் தொடக்க காலத்தை அடுத்து வந்த நான்கு ஆண்டுகளில் மாணவர் தொகை 400 ஆகவும், ஆசிரியர் தொகை 14 ஆகவும் அதிகரித்தது.

திரு.கு.பாலச்சந்திர ஐயர் அவர்கள் அதிபராக கடமையேற்று 1984ம் ஆண்டு எமது பாடசாலை தரம் II பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டு க.பொ.த (சா/தர) வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. 1991ம் ஆண்டு திரு.M.மகாதேவன் அவர்கள் அதிபராக இருந்த காலத்தில் உயர்தர கலைப்பிரிவும் 1992 இல் வர்த்தகப்பிரிவும் ஆரம்பிக்கப்பட்டன. இதனடிப்படையில் எமது பாடசாலை 1C பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டு உவர்மலை விவேகானந்தா மகா வித்தியாலயம் என நாமம் சூட்டப்பட்டது.

1992ம் வருடம் திரு.சி.நவரத்தினம் அவர்கள் அதிபராகப் பதவியேற்ற பின்பு பாடசாலை ஆரம்பித்து 14 வருடங்களின் பின் முதன் முதல் பரிசளிப்பு விழா கலாசார மண்டபத்தில் நடாத்தப்பட்டது. இதன் போது முதல் சஞ்சிகையான **மலையருவி** வெளியிடப்பட்டது. மேலும் 1994ம் வருடம் கணித, விஞ்ஞானப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு 1AB பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டதுடன் உவர்மலை விவேகானந்தா கல்லூரி எனவும் பெயர் மாற்றம் பெற்று இன்று வரை தலை நிமிர்ந்து நிற்கின்றது.எமது கல்லூரியின் பௌதீக வளர்ச்சிப்படியில் முக்கிய சாதனையாகத் திகழ்ந்து வானளாவ உயர்ந்து நிற்பது விவேகானந்தா கலையரங்கமாகும். இக்கலையரங்கத்தை எப்படியும் கட்டி முடித்து விட வேண்டும் என்ற மன உறுதியோடு உழைத்தவர் அதிபர். திரு.சி.நவரத்தினம் அவர்கள். அவரது அயராத உழைப்பும் காலஞ் சென்ற பாராளுமன்ற உறுப்பினர் திரு.அ.தங்கத்துரை அவர்களின் உதவியினாலும் காலத்திற்குக் காலம் சேவையிலிருந்த கல்விச் செயலாளர்களின் உதவியுடனும் வடக்கு கிழக்கின் அன்றைய ஆளுனர் காமினி பொன்சேகா அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு 2006 இல் திறந்து வைக்கப்பட்டது. இதே அதிபரின் காலத்தில் மாணவர்களின் முக்கிய தேவையாக இருந்த மாணவர் விடுதிக்கும் அடிக்கல் நாட்டப்பட்டு திரு.Aசெல்வநாயகம் அதிபர் அவர்களின் காலத்தில் 2010 இல் திறந்து வைக்கப்பட்டது. இவ்வாறு துரித வளர்ச்சி கண்ட இக்கல்லூரிக்கு உறுதுணையாக பணியாற்றிய அதிபர்களின் வரிசையில் திரு.எஸ் நவரத்தினம் அதிபர் அவர்கள் இக்கல்லூரியில் சுமார் 16 வருடங்கள் ( 1992 – 2008 ) சேவையாற்றி ஓய்வுபெற்றார். இவரது சேவைக்காலம் கல்லூரியின் வரலாற்றில் மிகவும் உன்னதமானது என கல்லூரி சார்ந்த சமூகம் இன்றும் நினைவுகூருவது குறிப்பிடத்தக்கது.

திரு.சி.நவரத்தினம் அதிபர் அவர்களைத் தொடர்ந்து திருகோணமலை கல்வி வலயத்தின் முன்னாள் வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.N.விஜேந்திரன் அவர்களும், ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளர் திரு.Aசெல்வநாயகம் அவர்களும், திருகோணமலை குச்சவெளிக்

கோட்டத்தின் முன்னாள் கோட்டக்கல்வி அதிகாரி திரு.எஸ்.மதியழகன் அவர்களும் ஓய்வு பெற்ற அதிபர் திரு.எஸ்.ஆனந்தசிவம் அவர்களும் ஓய்வுபெற்ற அதிபர் திரு.வே.தவராஜா அவர்களும் தத்தமது காலப்பகுதிக்குள் சிறந்த முகாமைத்துவத்தின் மூலம் எங்கள் கல்லூரியை சிறப்பாக வழிநடத்திச் சென்றனர். திரு.எஸ்.ஆனந்தசிவம் அதிபர் அவர்களின் காலத்தில் தொழில்நுட்ப பாடத்துறையும் (2017) ஆரம்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இவர்களுக்குப் பக்கபலமாக பிரதி அதிபர்களும் முகாமைத்துவக் குழுவினரும், அர்ப்பணிப்புடனான ஆசிரியர் குழாமும், பாடசாலை அபிவிருத்திக் குழு மற்றும் பழைய மாணவர் சங்கத்தினரும், ஏனைய நலன் விரும்பிகளும் கொடுத்த பேராதரவு மிக முக்கியமானதாகும். இவர்களைத் தொடர்ந்து இக்கல்லூரியை மேலும் வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்ல திரு.க.ரவிதாஸ் அவர்கள் 2017.10.23 இல் கடமையேற்று தனது சிறந்த முகாமைத்துவத்தின் கீழ் இக்கல்லூரியை சிறப்பாக வழிநடத்திச் செல்ல இவருக்கு, பாடசாலை அபிவிருத்திக்குழுவும், அதன் செயலாளர் திரு.வே.புஸ்பாகரனும், மற்றும் பழைய மாணவர் சங்கமும், அதன் செயலாளர் திருமதி.M.கிருஷாந்தி அவர்களும் உறுதுணையாவிருந்தனர்.அவர்களைத் தொடர்ந்து பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் திரு.கிருபாகரன் அவர்களும் பழைய மாணவர் சங்கச் செயலாளர் திரு. P.முகுந்தன் அவர்களும் உறுதுணையாகவிருந்தனர்.

அதிபர் திரு.க.ரவிதாஸ் அவர்களின தலைமையின் கீழ் கல்லூரி கல்வி வளர்ச்சியிலும். இணைப்பாட விதான வளர்ச்சியிலும் சிறந்த நிலையை எட்டியது.சாதாரண தர பெறுபேறுகள் 2019 இல் 94 வீதத்தை பதிவுசெய்தது.அதைத் தொடர்ந்து வந்த காலத்திலும் 80 வீதத்தை விட அதிகரித்த நிலைமையை பதிவு செய்திருந்தது. ஒவ்வொரு வருடமும் சராசரியாக முப்பது மாணவர்கள் பல்கலைகழகத்திற்கு சகல துறைகளில் இருந்தும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். குறிப்பாக 2022 ஆம் ஆண்டு அறுபது பேருக்கும் அதிகமானோர் பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்டமை வரலாற்றுச் சாதனையாகும். உயர்தர மாணவர்களின் பிரியாவிடை நிகழ்வின் போது **வையாளி** என்ற சஞ்சிகை 2018 தொடக்கம் வெளியிடப்பட்டு வருகின்றுது. இந்நூல் சிறந்த ஆவணமாகவும் பேணப்படுகின்றது. ஆரம்பப் பிரிவினால் **விவேக அரும்பு** எனும் சஞ்சிகை தரம் ஐந்து மாணவர்களின் புலமை பரிசில் பரீட்சை பெறுபேற்றை மையப்படுத்தி வெளியிடப்படுகின்றது.. இதில் தரம் ஐந்து பரீட்சைப் பெறுபேற்று ஆய்வுகள் வெளியிடப்படுகின்றன. இதன்படி இறுதியாக 2023 இல் எழுபது புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள் 97 வீதத்தினர் எனப்பதிவு செய்யப்பட்டிருந்தது. இதே வேளை 27 பேர் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றிருந்தனர். இவற்றை விட இணைப்பாட விதான சாதனைகள்

மற்றும் பௌதிக வள அபிவிருத்தி தொடர்பான வளர்ச்சியும் சிறப்பாகவே அமைந்திருந்தன. இவை பற்றிய தரவுகளை விவேகரதம் வையாளி மற்றும் விவேக அரும்பு ஆகிய நூல்களில் பதிவிட்டிருக்கின்றார்கள். சில வருடங்களாக இயங்காதிருந்த மாணவர் விடுதியை மீண்டும் இயங்கச் செய்ய அதிபர் அவர்கள் நடவடிக்கை எடுத்திருந்தார். இப்போது இருபது மாணவர்கள் வரையில் பயன் பெறுகின்றார்கள். இன்றைய சூழ் நிலையில் பிற மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் பலரும் இக்கல்லூரியில் இணைந்து கொண்டு கல்வி கற்கின்றார்கள். என்ற விடயமும் இங்கு கற்பதற்கான அனுமதியைக்கேட்டு வருகின்ற விண்ணப்பங்களின் தொகையும் கல்லூரியின் வளர்ச்சியைக் காட்டுகின்றன. இத்தகைய வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக, கடமையிலிருக்கின்ற அதிபர் திரு.க.ரவிதாஸ் அவர்களும், அவருடைய முகாமைத்துவ குழுவினரும், ஆசிரியர் குழாத்தினரும், மாணவர்களும் மற்றும் பெற்றோரும் விளங்குகின்றனர். இவ்வருடத்துடன் தனது நாற்பது வருடகால பணியிலிருந்து ஓய்வு பெறவிருக்கும் கல்லூரியின் அதிபர் திரு.க.ரவிதாஸ் அவர்களின் சிறந்த முகாமைத்துவம் மற்றும் வழிநடத்தலின் கீழ் இக்கல்லூரி சிறப்பான தடத்தில் பயணித்ததைப் போலவே தொடர்ந்தும் முன்னேற வேண்டுமென பிரார்த்திப்போம்.

**வே.சுந்தரராஜன்**
**ஆசிரியர்**





திரு.V.தங்கவேல்
1978.02.10 – 1984.10.14



திரு.K.பாலச்சந்திரன்
(அமரர்)
1984.10.15 – 1990.12.31



திரு.M.மகாதேவன்
(அமரர்)
1991.01.01 – 1992.04.03



திரு. S. நவரட்ணம்
1992.04.04 – 2008.06.23



திரு. N. விஜேந்திரன்
2008.06.30 – 2008.10.31



திரு. A. செல்வநாயகம்
2008.11.01 – 2012.06.12



திரு. S. ஆனந்தசிவம்
2012.06.13 – 2012.12.18
2013.10.05 – 2017.09.08



திரு. S. மதியழகன்
2012.12.19 – 2013.10.04



திரு. V. தவராஜா
2013.10.05 – 2017.09.08



திரு. K. ரவிதாஸ்
2017.10.23 – 2024.01.03

# தி / உவர்மலை விவேகானந்தா கல்லூரி

## சேவையாற்றிய முன்னாள் அதிபர்களும் காலப்பகுதிகளும்

| அதிபர்கள் | காலம் | சேவைக்காலம் | | |
|---|---|---|---|---|
| | | வருடம் | மாதம் | நாள் |
| திரு. V. தங்கவேல் | 1978.02.10 – 1984.10.14 | 06 | 08 | 04 |
| திரு. K. பாலச்சந்திரஐயர் ( அமரர் ) | 1984.10.15 – 1990.12.31 | 06 | 02 | 16 |
| திரு. M. மகாதேவன் ( அமரர் ) | 1991.01.01 – 1992.04.03 | 01 | 03 | 02 |
| திரு. S. நவரத்தினம் | 1992.04.04 – 2008.06.23 | 16 | 02 | 19 |
| திரு. N. விஜேந்திரன் | 2008.06.30 – 2008.10.31 | - | 04 | 01 |
| திரு. A. செல்வநாயகம் | 2008.11.01 – 2012.06.12 | 03 | 07 | 11 |
| திரு. S. ஆனந்தசிவம் | 2012.06.13 – 2012.12.18 | - | 06 | 05 |
| திரு. S. மதியழகன் | 2012.12.19 – 2013.10.04 | - | 09 | 15 |
| திரு. S. ஆனந்தசிவம் | 2013.10.05 – 2017.09.08 | 03 | 11 | 03 |
| திரு. V. தவராஜா | 2017.09.09 – 2017.10.22 | - | 01 | 13 |
| திரு. K. ரவிதாஸ் | 2017.10.23 – 2024.01.03 | 06 | 02 | 10 |

# தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி

## தரம் 5 புலமைப் பரீட்சைப் பெறுபேற்று பகுப்பாய்வு

| ஆண்டு | தோற்றியோர் | வெட்டுப்புள்ளிக்கு மேல் | சித்தி வீதம் (%) | 70க்கு மேல் | சித்தி வீதம் (%) |
|---|---|---|---|---|---|
| 1994 | 53 | 10 | 19% | 34 | 83% |
| 1995 | 65 | 12 | 18.50% | 32 | 68% |
| 1996 | 98 | 23 | 23.50% | 47 | 71% |
| 1997 | 97 | 23 | 24% | 42 | 67% |
| 1998 | 102 | 09 | 9% | 65 | 72.50% |
| 1999 | 109 | 36 | 33% | 54 | 83% |
| 2000 | 123 | 46 | 37% | 62 | 88% |
| 2001 | 103 | 57 | 55% | 38 | 92% |
| 2002 | 119 | 47 | 39.50% | 49 | 81% |
| 2003 | 84 | 28 | 33% | 41 | 82% |
| 2004 | 96 | 29 | 30% | 53 | 85% |
| 2005 | 99 | 31 | 31% | 53 | 84% |
| 2006 | 106 | 34 | 32% | 62 | 91% |
| ~~2007~~ | ~~107~~ | ~~53~~ | ~~49.50%~~ | ~~46~~ | ~~93%~~ |
| 2008 | 90 | 38 | 42% | 43 | 90% |
| 2009 | 102 | 25 | 24.50% | 72 | 95% |
| 2010 | 124 | 45 | 36% | 66 | 90% |
| 2011 | 96 | 38 | 39.50% | 56 | 98% |
| 2012 | 109 | 21 | 19% | 81 | 93.60% |
| 2013 | 107 | 19 | 18% | 83 | 95% |
| 2014 | 114 | 25 | 22% | 85 | 96% |
| 2015 | 112 | 24 | 22% | 81 | 94% |
| 2016 | 122 | 16 | 13% | 95 | 91% |
| 2017 | 115 | 19 | 17% | 83 | 89% |
| 2018 | 116 | 11 | 9.48% | 95 | 91% |
| 2019 | 114 | 30 | 27% | 78 | 95% |
| 2020 | 104 | 17 | 16% | 86 | 99% |
| 2021 | 114 | 27 | 24% | 103 | 90% |
| 2022 | 104 | 16 | 16% | 99 | 95% |
| 2023 | 113 | 27 | 23.89% | 110 | 97% |

# Best Results in GCE(O/L) : 2018 - 2022


| Year | Name of Student | Results |
|---|---|---|
| 2018 | Amshika Nadesabavanantham | 9A |
| | Balakumaran Jhyogadharshan | 9A |
| 2019 | E.J.Sathurshan | 9A |
| | K.Tharushnan | 9A |
| | P.Kishobika | 9A |
| | V.Diviksharan | 9A |
| 2020 | Poshika Balasubramaniam | 9A |
| | Tharshika Thirumenirasa | 9A |
| 2021 | Rameshkumar Mitharshan | 9A |
| | Gobahan Akshithan | 9A |
| 2022 | Kamsana Thurenthiran | 9A |
| | Nitharshan Sivarajah | 9A |
| | Tharuxsha Amarnath | 9A |

# BEST RESULTS IN G.C.E.(A/L) : 2018 - 2023

| Year | Name of Student | Subject Srteam | Results | Z-Score | District Rank | Island Rank |
|---|---|---|---|---|---|---|
| 2018 | Lavagugarasa Hajeekaran | Biology | 2A,B | 1.8798 | 11 | 1094 |
| | Sownthararasa Jathurshan | Physical Science | 3B | 1.4242 | 21 | 2807 |
| | Tharshika Jeyathas | Commerce | 3A | 1.9356 | 8 | 717 |
| | Anushiya Rasanathan | Arts | 3A | 1.9024 | 7 | 568 |
| 2019(New) | Srikanth Kugasaran | Physical Science | 2A,B | 1.8879 | 14 | 1379 |
| | PirunthabanaLinganathan | Commerce | 3A | 2.1096 | 3 | 209 |
| | Sakirthana Raveendran | Commerce | 3A | 1.8839 | 9 | 889 |
| | Sathasivam Kobishanth | Commerce | 3A | 1.6523 | 25 | 2182 |
| 2019(Old) | Jeyathasan Thusyanthan | Physical Science | 2A,B | 1.8313 | 1 | 275 |
| | Xavier Joycaleb | Biology | 2A,B | 1.9481 | 1 | 272 |
| 2020 | Sithravelayutham Mithushanth | Physical Science | 3A | 2.3638 | 1 | 285 |
| | Chandrasegaram Piriyaloshan | Physical Science | 3A | 2.1409 | 5 | 637 |
| | Veerakulansingam Rachsuthan | Physical Science | 2A,B | 1.7158 | 17 | 2030 |
| | Nerashika Ravinthiran | Biology | 3A | 2.3012 | 3 | 347 |
| | Saththiyalingam Pranith | E.Technology | A,2B | 1.9445 | 5 | 439 |
| | Davidpillay Warrenpillay | Commerce | 2A,B | 1.9036 | 10 | 837 |
| | Ann Antonitta Shanthakumar | Commerce | 2A,B | 1.3983 | 63 | 4924 |
| | Joice Amesha Amalrajah | Commerce | 3A | 1.3778 | 66 | 5169 |
| 2021(2022) | Jegatheeswaran Danusigan | Physical Science | 3A | 1.9229 | 9 | 1287 |
| | Kokulakavi Ganesh | Commerce | 3A | 1.6712 | 24 | 2500 |
| | Sathurshana Raseswarasarma | Commerce | 3A | 1.4379 | 44 | 4848 |
| | Uthayashangar Nasikethan | B.S.Technology | 2B,C | 1.4888 | 12 | 633 |
| 2022(2023) | Mathivanan Inthujan | Biology | 3A | 2.2845 | 7 | 429 |
| | Vigneshwaran Nidharshan | Physical Science | 3A | 2.5743 | 2 | 163 |
| | Anushika Manogaran | B.S.Technology | A,B,C | 1.682 | 5 | 340 |
| | Komika Lingeswaran | Commerce | 3A | 1.7897 | 12 | 1718 |
| | Kumanan Thavappriyan | Commerce | 3A | 1.5645 | 33 | 3575 |
| | Rasathurai Jannikka | Arts | 3A | 1.9362 | 11 | 705 |
| | Thangaroopan Dilaksha | Arts | 3A | 1.7768 | 28 | 1681 |
| | Sivakumar Thaushikka | Arts | 3A | 1.6589 | 59 | 2827 |

# பாடசாலை 45 வருட வரலாற்றில் கல்லூரி பெற்றுக் கொண்ட அதி உயர் பெறுபேறுகள் வீதம்

| பரீட்சை பெயர் | ஆண்டு | வீதம் |
|---|---|---|
| தரம் 5 புலமை பரிசில் பரீட்சை | 2020 | 99% |
| க.பொ.த.(சாதரண தரம் ) | 2019 | 94% |
| க.பொ.த.(உயர் தரம் ) | 2018 | 85.5% |



## இணைப்பாட விதான செயற்பாடுகளில் மாணவர் பெற்ற வெற்றிகள்

M-Merit, B-Bronze Medal, F-Finalist, P-Participated,C-Consolation Prize,S-Silver Medal,G-Gold Medal

| தொ.இல | வருடம் | போட்டி நிகழ்ச்சியின் பெயர் | பங்குபற்றிய மாணவரின் பெயர் | தரம் பிரிவு | மாகாணம் | தேசியம் | சர்வதேச |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2018 | தனிநடனம் | க.வேரணியா | 7 | 1 | 2 | |
| 2 | | நாட்டிய நாடகம் | க.வேரணியா | திறந்த போட்டி | 1 | 2 | |
| 3 | | | க.வேரணியா | | | | |
| 4 | | | சி.பவித்ரா | | | | |
| 5 | | | க.பிரபா | | | | |
| 6 | | | க.கிர்ஷானி | | | | |
| 7 | | | த.சப்தவி | | | | |
| 8 | | | த.திவ்யா | | | | |
| 9 | | | பே.டிலக்ஷிக்கா | | | | |
| 10 | | | வி.செந்தூரி | | | | |
| 11 | | | யோ.சஜித்தா | | | | |
| 12 | | | லி.லிலானி | | | | |
| 13 | | | யோ.பிரியசஜீனா | | | | |
| 14 | | | ம.டக்ஷிக்கா | | | | |
| 15 | | Recitation | க.போஷிகா | 9 | 2 | | |
| 16 | | Cursive Scipt | த.கல்பனா செவ்வந்தி | 12 | 2 | | |
| 17 | | Hand Writing | க.சாலினி | 13 | 1 | | |
| 18 | | Innovation | ம.எடிசன் | 10 | P | B | |
| 19 | | | கு.ரூபஸ்ரீ | 10 | P | B | |
| 20 | | | கம்சிகன் | 10 | P | P | |
| 21 | | விவிலியப் போட்டி | வி.விக்னேஷ் | 10 | 1 | 2 | |
| 22 | | | தே.ஜெபோனா | 10 | 1 | 2 | |
| 23 | | | தே.ஜெருஷா | 10 | 1 | 2 | |
| 24 | | | செ.செருபி | 11 | 1 | 2 | |
| 25 | | கணித ஒலிம்பியாட் | பா.தனோவன் | 6 | P | P | M |
| 26 | | | உ. தனுசிகன் | 9 | P | P | B |
| 27 | | | டிலுக்ஷனன் | 13 | P | P | B |
| 28 | | கராட்டி | தெ.அனோஜ் | Un-16 | 3 | | |
| 29 | | | தெ.யுகெஜ் | Un-16 | 3 | | |
| 30 | | Chees | டிலுக்ஷனன் | Un-20 | 2 | | |
| 31 | | | ம.வதுஷன் | | | | |
| 32 | | | க.ஹரிசாந்த் | | | | |
| 33 | | | சி.ரிசிகேஷன் | | | | |
| 34 | | | கோ.கோபர்த்தனன் | | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 35 | | | க.கதிஸ்மன் | | | | |
| 36 | | | அ.சுபோசனன் | | | | |
| 37 | | | கெ.மைக்கல் | | | | |
| 38 | | | வி.ஜனுசங்கன் | | | | |
| 39 | | | ர.ஹர்ஷானந்தன் | | | | |
| 40 | | | கு.பவோர்ஷன் | | | | |
| 41 | | | ர.ராஜன் | | | | |
| 42 | | Carrom | உ.லினோஜன் | Un-20 | 3 | | |
| 43 | | | தே.நிலுக்ஷன் | | | | |
| 44 | | | ர.ஹிர்த்திக்ரோஷன் | | | | |
| 45 | | | கெ.கோபிஷன் | | | | |
| 46 | | தனி இசை | ர.நதுஷியா | 13 | 1 | | |
| 47 | | | து.துரஷாந்தன் | 12 | C | | |
| 48 | | | ஹரிசாய் | 12 | C | | |
| 49 | | | கு.ரூபஸ்ரீ | 10 | 1 | | |
| 50 | | | ம.எடிசன் | 10 | 1 | | |
| 51 | | புத்தாக்கம் | அ.சஞ்ஜீவன் | 10 | P | F | |
| 52 | | | மிராத்தன் | 10 | P | F | |
| 53 | | | தே.கம்ஷிகன் | 10 | P | | |
| 54 | | | சி.தெனுஷன் | 11 | P | | |
| 55 | | சமூகவிஞ்ஞானப் போட்டி | ச.அட்சயா | 10 | 3 | | |

| தொ.இல | வருடம் | போட்டி நிகழ்ச்சியின் பெயர் | பங்குபற்றிய மாணவரின் பெயர் | தரம் பிரிவு | மாகாணம் | தேசியம் | சர்வதேச |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | கைப்பணிப்போட்டி | ரா.பர்விஷ் ரோஷன் | 6 | P | | |
| 2 | | | சே. யூட்சன் | 7 | P | | |
| 3 | | கணித ஒலிம்பியாட் | உ. தனுசிகன் | 10 | P | | |
| 4 | | கணித வினாடி வினாப் போட்டி | உ.தனுசிகன் | 10 | P | | |
| 5 | | சிதம்பரா கணிதப் போட்டி | சி.நிதர்சன் | 8 | | P | |
| 6 | | | ஆ. சாகித்யன் | 9 | P | | |
| 7 | | தனி நடனம் | யோ.பிரியசஜீனா | 12 | 2 | | |
| 8 | | | லி.பிருந்தாபனா | 13 | | | |
| 9 | | வணிகப்போட்டி | ர.சகீர்த்தனா | 13 | 1 | 1 | |
| 10 | | | உ.சஜிலக்ஷன் | 13 | | | |
| 11 | | | தி.டிருஷாந்த் | | | | |
| 12 | | | தி.சந்தோஷ் | | | | |
| 13 | | | அ.கோபிஷாந்த் | | | | |
| 14 | | வில்லுப்பாட்டு | பு.கேதாரன் | திறந்த போட்டி | 3 | | |
| 15 | | | இ.சஜிராஜ் | | | | |
| 16 | | | ப.சாரோன் | | | | |
| 17 | | | கு.ரூபஸ்ரீ | | | | |
| 18 | | தனி நடனம் | யோ.பிரியசஜீனா | 13 | 2 | | |
| 19 | | | ர.ஹர்ஷானந்தன் | | | | |
| 20 | | | கு.பவோர்ஷன் | | | | |
| 21 | | | ம.மிதுர்ஷன் | | | | |
| 22 | | Carrom | உ.லினோஜன் | Un-20 | 1 | | |
| 23 | | | தே.நிலுக்ஷன் | | | | |
| 24 | | | ர.ஹிர்த்திக்ரோஷன் | | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 25 | | | கெ.கோபிஷன் | | | | |
| 26 | | | டி.டிலுக்ஷனன் | | | | |
| 27 | | | உ.கிரிசோத்மன் | | | | |
| 28 | | | ம.கேயிஸ்மன் | | | | |
| 29 | 2019 | Chees | கோ.கோபர்த்தனன் | Un-20 | 2 | | |
| 30 | | | க.கதிஸ்மன் | | | | |
| 31 | | | அ.சுபோசனன் | | | | |
| 32 | | | ஜெ.நவீன்ராஜ் | | | | |
| 33 | | கராட்டி | தெ.அனோஜ் | Un-16 | 2 | | |
| 34 | | Maths Quiz | உ.தனுசிகன் | *10* | P | P | |
| 35 | | சித்திரப்போட்டி | வி.தர்ஷனன் | *11* | P | C | |
| 36 | | புத்தாக்கம் | தி.தருஸ்ணன் | *11* | P | F | |
| 37 | | | ம.ஹரிக்ஷன் | *11* | | | |
| 38 | | | ஆ.சுபானி | 7 | 1 | | |
| 39 | | | ஞா.காயத்திரி | 7 | | | |
| 40 | | | வி.கபிஷா | 6 | | | |
| 41 | | | ச.கஜீவினி | 6 | | | |
| 42 | | | தெ.யுக்தா | 6 | | | |
| 43 | | | பி.பிரத்தனா | 6 | | | |
| 44 | | கர்நாடக சங்கீதப் போட்டி | ஸ்ரீ.மிருனாளினி | 8 | | | |
| 45 | | | த.தனுஜா | 8 | | | |
| 46 | | | அ.தருக்ஷா | 8 | | | |
| 47 | | | ர.வர்ஷாலி | 8 | | | |
| 48 | | | போ.சரோன் | 10 | | | |
| 49 | | | தி.டிருஷாந்த் | 13 | | | |
| 50 | | | க.தேசிகன் | 9 | | | |
| 51 | | வயலின் இசை | பெ.விஸ்வாஸ் | 10 | *2* | | |
| 52 | | தனிஇசை | நி.சதுர்சனா | 13 | *2* | | |
| 53 | | தனிஇசை | ஆ.சுபானி | *10* | *1* | *2* | |
| 54 | | Econ Icon | யோ.பிரியசஜீனா | | | | |
| 55 | | | லி.பிருந்தாபனா | | | | |
| 56 | | | சி.டிலோஜன் | 13 | | 1 | |
| 57 | | | உ.சஜிலக்ஷன் | | | | |
| 58 | | | ச.கோபிஷாந்த் | | | | |

| தொ.இல | வருடம் | போட்டி நிகழ்ச்சியின் பெயர் | பங்குபற்றிய மாணவரின் பெயர் | தரம் பிரிவு | மாகாணம் | தேசியம் | சர்வதேச |
|---|---|---|---|---|---|---|---|
| *1* | | Oratory Impromptu | S.Harikeshan | 13 | 3 | | |
| *2* | | Kata | T.Anojh | 12 | 2 | 3 | |
| *3* | | Weight Lifting | T.Yuktha | 9 | 2 | | |
| *4* | | Weight Lifting | K.Saranika | 9 | 2 | | |
| *5* | | | M.Thubcthan | 12 | 1 | | |
| *6* | | | T.Kishan | 13 | | | |
| *7* | | | S.Sanjeev | 13 | | | |
| *8* | | Carrom(Boys) | A.Yathushan | 12 | 1 | | |
| *9* | | | J.Yathushanth | 13 | | | |
| *10* | | | V.Vithurjan | 13 | | | |
| *11* | | Art | I.J.Joel | 11 | | 3 | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 12 | | சிறுகதையாக்கம் | து..கம்ஸனா | 11 | 2 | | |
| 13 | 2022 | இலக்கணப்போட்டி | சி.தனுசிகா | 12 | 3 | | |
| 14 | | Science Quiz | S.Habishan | 7 | M | | |
| 15 | | புத்தாக்கம் | த.ஜோகிகாந்த் | 11 | 1 | F | |
| 16 | | புத்தாக்கம் | ம.சோபனன் | 11 | M | | |
| 17 | | | A.Larrys Fallon | 4 | | B | |
| 18 | | | U.Ashwin | 5 | | G | |
| 19 | | | R.Harshika | 6 | | B | |
| 20 | | | R.Sashwin | 6 | | B | |
| 21 | | Maths Quiz | Shaloom Marshal | 7 | | S | |
| 22 | | | S.Kopika | 8 | | G | |
| 23 | | | V.Mirushigan | 8 | | G | |
| 24 | | | B.Koshika | 9 | | B | |
| 25 | | | M.Prarthana | 9 | | B | |

| தொ.இல | வருடம் | போட்டி நிகழ்ச்சியின் பெயர் | பங்குபற்றிய மாணவரின் பெயர் | தரம் | மாகாணம் | தேசியம் | சர்வதேச |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | English Day-Oratory | T.Yuktha | 10 | 3 | | |
| 2 | | தமிழ் தினப் போட்டி-தனி நடனம் | R.Yathushika | 10 | 1 | 2 | |
| 3 | | தமிழ் தினப் போட்டி-தனி நடனம் | N.Sharmi | 8 | 2 | | |
| 4 | | ஆக்கமும் எழுத்தும் | P.Thilakshika | 4 | 1 | | |
| 5 | | Science Olimbiad | N.Banusha | 7 | M | | |
| 6 | | | உ.டிலக்ஷன் | | | | |
| 7 | | | லி.ஷனோத் | | | | |
| 8 | | | பி.ஷாரோன் | | | | |
| 9 | | | ஹ.அபிஷாந்த் | | | | |
| 10 | | சங்கீதம்(குழு இசை-இருபாலர்) | ர.மதுர்ஷன் | திறந்த போட்டி | 1 | 2 | |
| 11 | | | சி.கவிப்பிரிதா | | | | |
| 12 | | | நி.சதுர்ஷனா | | | | |
| 13 | | | யோ.ரோஜனா | | | | |
| 14 | | | கெ.டிலக்ஷிக்கா | | | | |
| 15 | | | சி.திருஷாலினி | | | | |
| 16 | | | ஆ.சுபானி | | | | |
| 17 | | | ஞா.காயத்திரி | | | | |
| 18 | | | தெ.யுக்தா | | | | |
| 19 | | | சி.மிதுஷிக்கா | | | | |
| 20 | | சங்கீதம்(குழு இசை-இருபாலர்) | சி.ஹரினிகா | திறந்த போட்டி | 1 | 3 | |
| 21 | | | ம.பதிமிகன் | | | | |
| 22 | | | பி.விஸ்வாஸ் | | | | |
| 23 | | | சி.தனுஷ் | | | | |
| 24 | | | ம.அகிசோன் | | | | |
| 25 | | | வி.லுகெசிகன் | | | | |
| 26 | | சங்கீதம்(வர்ணம்) | நி.சதுர்ஷனா | 13 | 1 | 2 | |
| 27 | | | | | | | |
| 28 | | | | | | | |
| 29 | | | | | | | |
| 30 | 2023 | | | | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 31 | | அகில இலங்கை பரத நாட்டிய போட்டி(குழு நடனம்) | | திறந்த போட்டி | 1 | 2 | |
| 32 | | | | | | | |
| 33 | | | | | | | |
| 34 | | | | | | | |
| 35 | | | | | | | |
| 36 | | | | | | | |
| 37 | | அகில இலங்கை பரத நாட்டிய போட்டி(தனி நடனம்) | ரா.யதுர்ஷிக்கா | 10 | 1 | 2 | |
| 38 | | உலக ஐக்கிய சிலம்ப சமிமேளனத்தின் தெற்காசிய சிலம்பப் போட்டி-தொடு சிலம்பபம் | உ.பவிகாஷ் | 9 | | | G |
| 39 | | | சி.சுபிட்ஷகன் | 11 | | | S |
| 40 | | | சி.கோபிகா | 9 | | | S |
| 41 | | | எஸ்.சந்தோஷ் | 9 | | | S |
| 42 | | | வி.லுகேசிகன் | 10 | | | S |
| 43 | | | ஆர்.சாம் டேவிட் | 4 | | | B |
| 44 | | | கெ.தருஷன் | 13 | | | B |
| 45 | | உலக ஐக்கிய சிலம்ப சமிமேளனத்தின் தெற்காசிய சிலம்பப் போட்டி-ஒற்றைச்சிலம்பபம் | சி.சுபிட்ஷகன் | 11 | | | G |
| 46 | | | சி.கோபிகா | 9 | | | G |
| 47 | | | வி.லுகேசிகன் | 10 | | | S |
| 48 | | | ஆர்.சாம் டேவிட் | 4 | | | S |
| 49 | | | உ.பவிகாஷ் | 9 | | | S |
| 50 | | | எஸ்.சந்தோஷ் | 9 | | | B |
| 51 | | | கெ.தருஷன் | 13 | | | B |
| 52 | | உலக ஐக்கிய சிலம்ப சமிமேளனத்தின் தெற்காசிய சிலம்பப் போட்டி-வேல்கம்பு | வி.லுகேசிகன் | 10 | | | G |
| 53 | | | எஸ்.சந்தோஷ் | 9 | | | G |
| 54 | | | சி.சுபிட்ஷகன் | 11 | | | G |
| 55 | | | சி.கோபிகா | 9 | | | G |
| 56 | | | ஆர்.சாம் டேவிட் | 4 | | | G |
| 57 | | | உ.பவிகாஷ் | 9 | | | S |
| 58 | | | கெ.தருஷன் | 13 | | | B |



**தெற்காசிய சிலம்பாட்டப் போட்டியில்
பதக்கங்களை பெற்றமை**



**கராத்தே தேசிய மட்டத்தில்
3ம் இடம் – 2022**



**தேசிய மட்டத்தில்
பழுதூக்கல் போட்டியில்
பங்குபற்றியமை.**

# 2018–2023 வரையான காலப்பகுதியில் பாடசாலையின் பௌதீக வள அபிவிருத்தி

2018 -

- தொழினுட்ப பிரிவுக்கான புதிய கட்டடம் திறந்து வைக்கப்பட்டது
- ஆசிரியர்களுக்கான வாகனத் தரிப்பிடம் அமைக்கப்பட்டது.
- அதிபரின் மேற்பார்வையில் தரம் 3 பெற்றோர்கள் ஆரம்பப்பிரிவில் நீர் வழங்குவதற்கான கட்டட வசதிகள் ஏற்படுத்தப்பட்டது.
- மாணவர் விடுதியின் புனர்நிர்மான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.
- கலையரங்கத்தை மீண்டும் வர்ணம் தீட்டியதுடன் சில தொழினுட்ப கருவிகளும் மாற்றப்பட்டன.
- தரம் 9,10,11,போன்ற வகுப்புகளில் வெண்பலகை பொருத்தப்பட்டது.

2019-

- சாரணர் செயற்பாட்டறை அமைக்கப்பட்டது.
- அதிபர் அறையிலிருந்து நூலகம் வரையான நடைபாதை கொங்கீறிட் இடப்பட்டு அமைக்கப்பட்டது.
- புதிய பாண்ட் வாத்தியக் கருவிகள் கொள்வனவு செய்யப்பட்டன.
- 100 கதிரைகளும் 100 மேசைகளும் திருத்தியமைக்கப்பட்டன.
- ஆரம்பப் பிரிவினருக்கு தனியான பாண்ட் வாத்தியக் குழு அமைக்கப்பட்டது.
- பாடசாலையின் பல இடங்களிலும் பாதுகாப்பு கமராக்கள் பொருத்தப்பட்டன.
- வேலுப்பிள்ளை அரங்கு பூர்த்தி செய்யப்பட்டு மாணவர்களின் காலைக்கூட்டங்கள்,திறந்த வெளிச் செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டது.

2020

- மாணவர் விடுதியின் புனர்நிர்மான வேலைகள் முடிக்கப்பட்டு மாணவர் பாவனைக்கு கையளிக்கப்பட்டது.
- புதிதாக 3 நீர்த்தாங்கிகள் கொள்வனவு செய்யப்பட்டு நீர் வழங்கல் தேவை பூர்த்தி செய்யப்பட்டது.
- குழாய்க் கிணறு அமைக்கப்பட்டது.

- புதிதாக மாணவருக்கான துவிச்சக்கர வண்டித்தரிப்பிடம் ஒன்று அமைக்கப்பட்டது.
- கொரோனா நோயிலிருந்து பாதுகாப்புப் பெற கால்களைக் கொண்டு அழுத்தி திறந்து செயற்படுத்தப்படும் கைகழுவும் sinks பொருத்தப்பட்டன.

2021

- பாடசாலையின் தொழினுட்ப பிரிவினுள் அருள்மிகு மங்களநாதர் ஆலயம் நிர்மாணம் செய்யப்பட்டது.
- மாணவர் பயன்பாட்டுக்காக 58 Tablets கிடைக்கப்பெற்றன.
- அதிக மாணவர்கள் ஒரே தடைவையில் கைகளைக் கழுவுவதற்காக 20 நீர்க்குழாய்களும் ஒரு நீர்தாங்கியையும் கொண்ட அலகு ஒன்று தனியாக அமைக்கப்பட்டது.
- தரம் 10,11 வகுப்பறைகளுக்கு மொத்தமாக புதிதாக 16 மின்விசிறிகளும்,48 மின்குமிழ்களும்,24 குதைகளும் (plugs) பொருத்தப்பட்டன.
- Carrom,Chess போன்ற விளையாட்டுகளுக்களை பயிற்சி செய்யும் பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.
- பாடசாலையின் மதில் புனரமைப்பு செய்யப்பட்டன.
- ஸ்மாட் வகுப்பறையொன்று அமைக்கப்பட்டது.

- புதிதாக 3 கணிணிகள் கொள்வனவு செய்யப்பட்டது.
- மாணவர் விடுதியில் கூட்ட மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டது.
- தொழிநுட்ப பிரிவுக்கான வேலைத்தளம் புனரமைக்கப்பட்டது.
- ஆங்கில பாட அலகு ஒன்று உருவாக்கப்பட்டது.
- இராஜ மன்னார் அரங்கினுள் தற்காலிக வகுப்பறைகளுக்கான அடைப்புகள் பொருத்தப்பட்டு வகுப்பறைத் தேவைகள் பூர்த்திசெய்யப்பட்டன.
- கூட்ட மண்டபத்திற்கான கணிணி,பல்லூடக எறிவை,திரை,ஒலிபெருக்கி போன்றவை புதிதாக பொருத்தப்பட்டது
- தொழிநுட்ப பிரிவுக்காக தனியான மலசலகூடம் அமைக்கப்பட்டது.
- பாடசாலையின் முன் நுழைவாயில் புதிதாக வடிவமைப்புச் செய்யப்பட்டது.

2022

- ஆரம்பப்பிரிவு நுழைவாயில் புதிதாக வடிவமைப்புச் செய்யப்பட்டது.
- விஞ்ஞான ஆய்வுகூடத்திற்கென புதிய பல்லூடக எறியி ஒன்று பெற்றோர் மூலம் பெறப்பட்டது.

2023

- 300 மாணவர் கதிரை மேசைகள் திருத்தப்பட்டன.
- கணிணி அறை திருத்தப்பட்டது.
- ஆரம்பப் பிரிவு வளாகத்தின் மதில் புனரமைப்புச் செய்யப்பட்டது.
- CCTV கட்டமைப்பு மீளுருவாக்கப்பட்டது.
- காலை ஒன்று கூடலுக்காக புதிய மேடை உருவாக்கப்பட்து.
- ஆசிரியர்களுக்கான 25 மேசைகள் செய்யப்பட்டன.
- பாடசாலைக் கட்டடங்களுக்கான Wifi Connection ஏற்படுத்தப்பட்டது.
- பாடசாலைக்கான புதிய இணையத்தளம் உருவாக்கப்பட்டது.
- பாடசாலைக்கான You tube Channel உருவாக்கப்பட்டது.
- ஆரம்பப் பிரிவுக்கான Smart Board வழங்கப்பட்டு புதிதாக Smart வகுப்பறையொன்றும் திறந்து வைக்கப்பட்டது.
- புத்தாக்க ஆய்வுகூடம் தனியாக அமைக்கப்பட்டது.
- ஆரம்பப்பிரிவுப் பகுதியின் முப்பரிமான தோற்றத்திலுள்ள இலங்கையின் தரைத்தோற்ற அம்சங்கள் மீண்டும் புனரமைப்புச் செய்யப்பட்டு மாணவர் கற்றல் மேம்பாட்டுக்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றது.
- நூலகத்திற்காக 3 புதிய அலுமாரிகள் பழைய மாணவர்களின் உதவியுடன் பெறப்பட்டன.
- சரஸ்வதி சிலையின் முன்பகுதி கிறில் போடப்பட்டு அடைக்கப்பட்டது.

# தி / தி / உவர்மலை விவேகானந்தா கல்லூரி
# க.பொ.த (சா /த ) பெறுபேற்றுப் பகுப்பாய்வு
# 1984ம் ஆண்டு தொடக்கம்

| தொ. இல | ஆண்டு | தோற்றிய மாணவர் தொகை | சித்தியடைந்த மாணவர் தொகை | சித்தி வீதம் |
|---|---|---|---|---|
| 01. | 1984 | 05 | 02 | 40 % |
| 02. | 1985 | 12 | 06 | 50 % |
| 03. | 1986 | 17 | 05 | 29 % |
| 04. | 1987 | 28 | 10 | 36 % |
| 05. | 1988 | 35 | 07 | 20 % |
| 06. | 1989 | 41 | 18 | 44 % |
| 07. | 1990 | 19 | 08 | 42 % |
| 08. | 1991 | 41 | 12 | 29 % |
| 09. | 1992 | 74 | 24 | 32 % |
| 10. | 1993 | 58 | 25 | 43 % |
| 11. | 1994 | 54 | 29 | 54 % |
| 12. | 1995 | 69 | 31 | 45 % |
| 13. | 1996 | 82 | 40 | 49 % |
| 14. | 1997 | 95 | 52 | 55 % |
| 15. | 1998 | 54 | 50 | 93 % |
| 16. | 1999 | 107 | 96 | 90 % |
| 17. | 2000 | 97 | 77 | 79 % |
| 18. | 2001 | 101 | 66 | 65 % |
| 19. | 2002 | 127 | 89 | 70 % |
| 20. | 2003 | 112 | 73 | 65 % |
| 21. | 2004 | 114 | 75 | 66 % |
| 22. | 2005 | 113 | 91 | 81 % |
| 23. | 2006 | 120 | 97 | 81 % |
| 24. | 2007 | 96 | 83 | 86 % |
| 25. | 2008 | 118 | 86 | 73 % |
| 26. | 2009 | 96 | 73 | 76 % |
| 27. | 2010 | 112 | 94 | 84 % |
| 28. | 2011 | 112 | 84 | 75 % |
| 29. | 2012 | 120 | 88 | 73 % |
| 30. | 2013 | 134 | 119 | 89 % |
| 31. | 2014 | 131 | 99 | 76 % |
| 32. | 2015 | 113 | 71 | 63 % |
| 33. | 2016 | 113 | 90 | 80 % |
| 34. | 2017 | 116 | 96 | 83 % |
| 35. | 2018 | 105 | 87 | 83 % |
| 36. | 2019 | 111 | 104 | 94% |
| **37.** | 2020 | 123 | 94 | 76% |
| **38.** | 2021 | 129 | 108 | 84% |
| **39.** | 2022 | 123 | 108 | 87.8% |



ஆசிரிய உதவியாளர்கள்



St.John Ambulance Kitties



மாணவ தலைவர்கள்

திி / தி / உவர்மலை விவேகானந்தா கல்லூரி
க.பொ.த (உ /த ) பெறுபேற்றுப் பகுப்பாய்வு
1993ம் ஆண்டு தொடக்கம்

| தொ.இல | ஆண்டு | தோற்றிய மாணவர் தொகை | சித்தியடைந்த மாணவர் தொகை | சித்தி வீதம் |
|---|---|---|---|---|
| 01. | 1993 | 10 | 03 | 30% |
| 02. | 1994 | 13 | 07 | 53.84% |
| 03. | 1995 | 25 | 14 | 56% |
| 04. | 1996 | 34 | 14 | 41.17% |
| 05. | 1997 | 44 | 22 | 50% |
| 06. | 1998 | 52 | 22 | 42.30% |
| 07. | 1999 | 50 | 20 | 40% |
| 08. | 2000 | 66 | 22 | 33.33% |
| 09. | 2001 | 55 | 35 | 63.63% |
| 10. | 2002 | 68 | 36 | 52.94% |
| 11. | 2003 | 61 | 31 | 50.81% |
| 12. | 2004 | 58 | 37 | 63.79% |
| 13. | 2005 | 76 | 39 | 51.31% |
| 14. | 2006 | 73 | 38 | 52.05% |
| 15. | 2007 | 55 | 32 | 58.18% |
| 16. | 2008 | 77 | 46 | 59.74% |
| 17. | 2009 | 88 | 55 | 62.5% |
| 18. | 2010 | 87 | 45 | 51.72% |
| 19. | 2011 | 89 | 44 | 49.43% |
| 20. | 2012 | 80 | 50 | 62.5% |
| 21. | 2013 | 96 | 46 | 47.91% |
| 22. | 2014 | 86 | 42 | 48.83% |
| 23. | 2015 | 112 | 62 | 55.35% |
| 24. | 2016 | 114 | 67 | 58.77% |
| 25. | 2017 | 88 | 50 | 56.81% |
| 26. | 2018 | 62 | 53 | 85.5% |
| 27. | 2019 | 102 | 59 | 57.84% |
| 28. | 2020 | 166 | 94 | 57%% |
| 29. | 2021 | 129 | 81 | 63% % |
| 30. | 2022 | 169 | 131 | 77.51% |

# மணிவிழாக்காணும் எங்கள் அதிபர் திரு.K.ரவிதாஸ் அவர்கள்

உவர்மலை கண்ணகி அம்மன் காற்சிலம்போடு கோலோச்சும் இம் மண்ணிலே, ஊர்மக்களால் உவந்தளிக்கப்பட்ட விவேகானந்தா கல்லூரியை குறுகிய நாற்பத்தைந்து வருட கால வளர்ச்சியில், ஒவ்வொரு வெற்றிப்படியாக உயர்த்திச் சென்ற பெருமை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்களையே சாரும். இவர்கள் எல்லோரையும் வழிப்படுத்தி பாடசாலையை வளப்படுத்திய பெருமை அதிபர் அனைவரையுமே சாரும். அந்த வகையில் இக்கல்லூரியின் பதினோராவது அதிபராக 2017.10.23 அன்று தொடக்கம் கடமையைப் பொறுப்பேற்று கல்லூரி சமூகத்தினரை சிறப்பாக வழிநடத்திச் சென்று கல்வி மற்றும் இணைப்பாட விதானங்களில் உயர் வெற்றியைப் பெறச்செய்த பெருமைக்குரியவராக மதிப்புக்குரிய அதிபர் திரு.K.ரவிதாஸ் அவர்கள் விளங்குகின்றார். 2024 மார்ச் முப்பதில் அறுபது வயதைப் பூர்த்தி செய்து ஓய்வு பெறவிருக்கும் அவரது மகத்தான பணியை பாராட்டாமல் இருக்கமுடியாது.சுமார் இருபத்து மூன்று வருடங்கள் அதிபர் சேவையை ஆற்றிய திரு.K.ரவிதாஸ் அவர்கள் எமது கல்லூரியில் ஆறுவருட சேவையையாற்றி தனது நிர்வாகத் திறனால் பலராலும் புகழப்படுகின்ற, சிறந்த முன்மாதிரியான அதிபராக திகழ்கின்றார்.

திருகோணமலையில் பல இலக்கிய வாதிகளையும் கல்விமான்களையும் தந்த பழம்பெரும் தமிழ் கிராமமாகிய ஆலங்கேணியில் 1964.03.30 இல் பிறந்த எங்கள் அதிபர் ஆலங்கேணி விநாயகர் மகா வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வி தொடக்கம் உயர்தரம் வரைக் கற்று அங்கிருந்து முதன்முதலாக பல்கலைக்கழகம் சென்ற மூவருள் ஒருவராகத் திகழ்கின்றார். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்திற்கு தெரிவாகி அங்கு தனது உயர்கல்வியை தொடரும் போதே நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில இணைந்து கல்வியைத் தொடர்ந்து கலைப்பட்டதாரியாக வெளியேறினார்.

கண்டி கலஹா இராமகிருஸ்ண மத்திய கல்லூரியில் ஆசிரியப் பணியை தொடங்கி பின்னர் தனது சொந்த ஊருக்கே வருகை தந்து ஆலங்கேணி விநாயகர் மகா வித்தியாலயத்தில் பணியாற்றினார்.நீண்ட கால சேவையின் பின்னர் திருகோணமலை விபுலானந்தாக் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று பணியைத் தொடர்ந்தார். 1998 தொடக்கம்

திருகோணமலை பிராந்திய கல்வி அலுவலகத்தில் வாழ்க்கைத் தேர்ச்சிப் பாட ஆசிரிய ஆலோசகராக இரண்டு வருடங்கள் கடமை புரிந்து இரண்டாயிரம் ஆண்டில் பாடசாலை சமூகத்தின் வேண்டுகோளை ஏற்று ஆலங்கேணி விநாயகர் மகா வித்தியாலயத்தில் அதிபராக கடமையை பொறுப்பேற்றார்.

ஆலங்கேணி விநாயகர் மகா வித்தியாலயம் பல தடவைகள் இனக்கலவரத்தினால் பாதிக்கப்பட்டு பல இடப்பெயர்வுகளுக்கு மத்தியில் மாணவர்கள் குறைவடைந்த நிலையில் மூதூர் வலயத்திற்கு உட்பட்டதாக இயங்கியது. நாட்டின் யுத்த சூழ்நிலைக்குள்ளும் கிண்ணியா பிரதேச இனக்கலவர சூழ்நிலைக்குள்ளும் அகப்பட்ட நிலையில் பெருஞ்சிரமத்திற்கு மத்தியில் பாடசாலையை இயக்கினார். தொடர்ந்து ஏற்பட்ட சுனாமி பேரலை தாக்கத்தை ஏற்படுத்தியது. கிண்ணியா தனி வலயமாக மாறிய போது அவ்வலயத்தில் இயங்கிய தமிழ் மக்களுக்கான ஒரேயொரு 1C பாடசாலையாக இயங்கியது. ஆசிரியர் பற்றாக்குறை பௌதிக வளப்பற்றாக்குறை என்பன பெரும் பிரச்சினையாக இருந்தன. இவை எல்லாவற்றையும் வெற்றி கொண்டு கல்வி வளர்ச்சி இணைப்பாட விருத்தி பௌதிக வள விருத்தி என்பவற்றை மேம்படுத்தினார்.

உயர்தர கலைப்பிரிவு சிறப்பாக இயங்கி மாணவர் ஒருவர் மாவட்டத்தில் முதல் நிலையைப் பெற்றார். அதேயாண்டில் மூவர் பல்கலைகழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டனர். நாட்டின் கலவரம் சுனாமிப்பேரலை என்பவற்றின் பின்னனியிலும் பாடசாலையின் கல்வி வளர்ச்சியைப் பார்த்தும் வேறு பிரதேச மாணவர்களும் வருகை தரத்தொடங்கினர்.சுங்காங்குழி கலைமகள் வித்தியாலய மாணவர்களும் இணைந்து கொண்டனர். இதனால் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது.உயர் தரத்தில் வர்த்தகப்பிரிவு உருவாக்கப்பட்டு ஆசிரியர்களின் உதவியோடு மாணவர் ஒருவர் முதல் தடவையிலேயே முகாமைத்துவ பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டார். படிப்படியாக கல்வி அடைவுமட்டம் அதிகரிப்பைக் காட்டியது. வலயமட்டத்திலும் பெறுபேறுகள் உச்ச நிலை பெற்றது. பௌதீக வள அபிவிருத்தியில் ஒன்று கூடல் மண்டபம், மூன்று மாடிக் கட்டிடங்கள் , இரண்டு அமைத்தமை சுற்று மதில் அமைத்தமை, நூலக அபிவிருத்தி, மைதான விஸ்த்தரிப்பு, கணணி ஆய்வு கூட அமைப்பு, பிரதான வாயில் முகப்பு அமைத்தமை என பல அபிவிருத்திகளும் இவருடைய காலத்திலேயே இடம்பெற்றன.

நேரமுகாமை என்பது இவரது விசேட ஆற்றலாகும்.குறித்த நேரத்தில் குறித்த வேலையைச் செய்ய வேண்டும் என்பதில் பிடிவாதமாக இருப்பார்.இவ்விடயத்தில் எப்போதுமே அவரிடம் விட்டுக்கொடுப்புக்கு இடமிருக்கவில்லை. இன்றுவரை அதில் மாற்றமில்லை. தேசிய

ரீதியில் அதிபர்களுக்கான போட்டிப் பரீட்சையில் தோற்றி தமிழ் மொழிப் பிரிவில் தேசிய ரீதியில் முதல் நிலையைப் பெற்று தேசிய பாடசாலை அதிபராக நியமனம் பெற்றிருந்தார். ஆனால் அவரை அதிபராகப் பெற தேசிய பாடசாலை கொடுத்து வைக்க வில்லையே என, ஒரு தசாப்தம் கடந்த நிலையில் இன்றும் பலர் அங்கலாய்ப்பதை காணமுடிகின்றது.

பல வலயக் கல்விப்பணிப்பாளர்களுக்கு கீழ் கடமை புரிந்தாலும் அனைவராலுமே கௌரவத்துக்குரியவராகவே மதிக்கப்பட்டிருக்கின்றார். அவரது சில தீர்மானங்கள் பலரையும் குழப்பத்தில் ஆழ்த்தும் ஆனால் அத்தீர்மானத்தின் படி செயல் பட்ட பின்னர் அத்தீர்மானம் நல்லதுதான் என்ற முடிவுக்குப் பலரும் வருவார்கள்.தான் நிர்வாகம் செய்த ஒவ்வொரு பாடசாலையிலும் சூழலுக்கேற்ப வேறுபட்ட நிர்வாக முறைகளை கையாண்டமை அவரது சிறப்பாகும். தனது ஆளணியினரை பொருத்தமாகவும் அதேவேளையில் அனைவரையும் பயன்படுத்தும் திறன் அவரிடம் காணப்பட்டது. யாரிடம் எத்தகைய பொறுப்புகளை ஒப்படைக்கலாம் என்பதை புரிந்து செற்படும் ஆளுமை அவரிடம் காணப்படுகின்றது.தனது நிர்வாகத்தின் கீழ் கடமை புரிபவரிடம் கடமையை மாத்திரம் எதிர்பாராமல் அவரது சுக துக்கங்களில் கூட அக்கறையெடுத்து விசாரித்து உதவும் மனப்பாங்கைக் கொண்டவர்.

ஆலங்கேணி விநாயகர் மகா வித்தியாலயத்தில் கடமையாற்றிய பின்னர் 2009 இல் அன்புவழிபுரம் கலைமகள் மகா வித்தியாலயத்தில் கடமையைப் பொறுப்பேற்று குறிப்பிடத்தக்க பல கல்வி அபிவிருத்தி பௌதிக வள அபிவிருத்திகளை ஏற்படுத்தியிருக்கின்றார். உயர்தர கலைப்பிரிவை உருவாக்கி முதற்தடவையிலேயே மூவரை பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிவைத்த பெருமைக்குரியவர்.சாதாரண தர பெறுபேற்றை உயர்த்த பல திட்டங்களை செயற்படுத்தி 80 வீதத்திற்கும் மேல் உயர்த்திக்காட்டிய பெருமை இவருக்குரியது.

பௌதிக வள விருத்தியில் ஒன்று கூடல் மண்டபத்தை முழுமைப்படுத்தி இரண்டு மாடிக் கட்டிடமாக்கியும், புதிய இரண்டு கட்டிடங்களை அமைத்தும், ஒன்று கூடல் மேடை அமைத்தமை, மாடிகளை இணைக்கும் மேம்பாலம் அமைத்தமை, முன் வாயில் முகப்பு அமைத்தமை, சரஸ்வதி சிலை அமைத்தமை போன்ற பௌதீக வள அபிவிருத்திகளை ஏற்படுத்தியவர்.

பின்னர் 2017.10.23இல் இருந்து உவர்மலை விவேகானந்தாக் கல்லூரிக்கு இடமாற்றலாகி இன்றுவரை வினைத்திறன் மிக்க அதிபர் என்ற பெருமையோடு விளங்குகின்றார். அவரது நிர்வாகத்தின் கீழ் இக்கல்லூரி கல்வி அபிவிருத்தியில் பல முன்னேற்றங்களை கண்டிருக்கின்றது.இணைப்பாட விதான சாதனைகள் தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களிலும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.அவர் அதிபராக கடமையாற்றிய பாடசாலைகளில் உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி அவருடைய ஆளுமையை மென் மேலும் வெளிப்படுத்திக் காட்டியிருக்கின்றது.பாடசாலை சமூகத்தினர் அனைவரையும் ஒருங்கு சேர அழைத்துச் செல்லும் சிறந்த முன்மாதிரியாக செயற்படும் தன்மையால் பலரதும் நன்மதிப்பை பெற்றிருக்கின்றார். அவரது ஆலோசனையின் பேரில் வையாளி என்ற உயர்தர பிரிவுக்கான சஞ்சிகை வெளிவருகின்றது. இது சிறந்த ஆவணப் பொக்கிசமாக விளங்கி வருகின்றது. இவரது காலகட்டத்தில் நடைபெற்ற அபிவிருத்திகளுக்கான சான்றாக விவேகரதம் மற்றும் வையாளி என்பன சான்றாக அமைகின்றன. இவர் பணியிலிருந்து ஓய்வு பெற்றாலும் இவரது நிர்வாக முறைமையை பலரும் முன்மாதிரியாகக் கொள்ளலாம். சிறந்த அதிபராக ஓய்வு பெறும் அதிபர் அவர்களை எமது கல்லூரி சமூகம் வாழ்த்தி நன்றி உணர்ச்சியோடு விடை கொடுக்கின்றது. வாழ்க வளமுடன் …. வாழ்க நலமுடன்….

**உவர்மலை விவேகானந்தா கல்லூரி குடும்பத்தினர்**

# திருகோணமலையின் மாணவ சமூகம்

மாற்றம் என்பதே மாறாதது மற்றய எல்லாம் மாறக்கூடியது. இயற்பியலின் அடிப்படையில் இயற்கையின் சக்தியை ஆக்கவோ அழிக்கவோ முடியாது. ஆனால் வடிவத்தினை மாற்றமுடியும் எனவே இயற்கை சமநிலை அடைவதற்காக தன்னை மாற்றிக்கொண்டே இருக்கும். ஆதலால் மாற்றம் என்பது இயற்கையானது. இன்றய சமுதாயமும் அவ்வாறனதுதான். பல மாற்றங்களை மிகவிரைவில் சந்திக்கின்றது. அதனால் தடுமாற்றமும் காண்கின்றது.

கருவில் ஒரு கலத்தில் ஆரம்பித்து பல்லாயிரக்கணக்கான கலங்களாக வளர்ச்சி அடைந்து மண்ணில் பிறக்கின்றது ஒரு குழந்தை. இக் குழந்தையின் மூளையின் வளர்ச்சி கருவில் ஆரம்பித்து ஐந்து வயதாகும்போது கிட்டத்தட்ட 90% முடிவடைந்துவிடுகின்றது. பிள்ளையின் திறமை மூளை வளர்ச்சியின்போதே தீர்மானிக்கப்பட்டுவிடுகின்றது. அன்னையின் சத்துணவும், அன்னை பிள்ளைக்கு வழங்கும் உணவு, அன்பு, மற்றும் அப்பாவின் நற்பண்புகள் என பெற்றோரின் பரம்பரை அலகு தொடங்கி எத்தனையோ விடயங்கள் பிள்ளையின் உள, உடல் வளர்ச்சியை தீர்மானிக்கின்றது. எனவே பிள்ளைகளை திறமைமிக்கவர்களாகவும், திடகாத்திரமானவர்களாகவும் பாடசாலைக்கு அனுப்பும் பொறுப்பு பெற்றோரினுடையது.

இங்கே தவறு நிகழும்போது வகுப்பறையில் பிள்ளையின் நடத்தையில் பிறழ்வு ஏற்படுகின்றது. அதனை சரிசெய்யும் திறமை ஆசிரியர்களிடம் இருப்பது அவசியம். முன்பள்ளிப் பருவத்தில் பிள்ளைகளின் உள விருத்தியை பொருத்தமான விதத்தில் செப்பனிடவேண்டும். ஆரம்ப கல்வியே ஏனையவற்றின் அடிப்படை அலகு. காரணம் மூளையின் மிகுதி 10% வளர்சியையும் திறனையும் வளர்க்கும் பொறுப்பு ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களுடையது. பத்து வயதினை அடையும்போது பகுத்து அறியும் ஆற்றல், கணித அறிவு வெளிப்படுகின்றது. இவற்றை உரியவாறு விருத்தி செய்யவேண்டும். ஆரம்ப கல்வியில் கொடுக்கபடும் சொற்களஞ்சியத்தின் அளவைப் பொறுத்தே பிள்ளையின் மொழிவளர்ச்சி நிகழ்கின்றது. கணிதத்தின் அடிப்படையிலேயே பிள்ளை பிரச்சினை தீர்க்கும் ஆற்றலைப் பெறுகின்றது.

சிறந்த பிரஜைகளை உருவாக்குவதே பாடசாலைகளின் நோக்கமாகும். பிள்ளையின் அறிவு, திறன், மனப்பாங்கில் வளர்ச்சிப்போக்கை விளைவிப்பதே ஒட்டுமொத்த ஆசிரியர்களின் பொறுப்பாகும். இன்று பிள்ளைகள் அறிவை பெறுபவர்களாக மட்டுமே உள்ளனர். பெற்றுக்கொண்ட அறிவை பிரயோகிக்கும் திறன் மிகக்குறைவாகவே காணப்படுகின்றது. மந்த நிலைக்கு பல காரணங்களை கூறலாம் அவற்றுள் வீடும், பாடசாலையும் அடங்குகின்றது என்பதில் சந்தேகமில்லை. மனப்பாங்கில்

நேர்மறைச்சிந்நதனைகள் அரிதாகவே விதைக்கப்படுகின்றது அவை மாணவர்களின் மனதில் முளைக்கவுமில்லை என்பது எதிர்கால சந்ததியை கேள்விக்குறியாக்குகின்றது.
வெறுமனே புள்ளிகளை பெறும் நோக்கிலே மாணவர்களின் கற்றல் நிகழ்கின்றது. வாசிப்புத்திறன், எழுதும் திறன் குறையும் போக்கை காட்டுகின்றது. தனிப்பட்ட திறமைகளை வெளிப்படுத்தவோ, கலை நிகழ்வுகளில் பங்குபற்றவோ மாணவர்கள் காட்டும் ஆர்வம் அரிகிக்கொண்டே செல்கின்றது. மாணவர்களின் தனித்திறமைகளிற்கு தடைபோடும் முட்டுக்கட்டையாக விளங்குவது பிரத்தியேக வகுப்புக்களின் அதீத ஆதிக்கம்தான். பெற்றோரின் முற்போக்கான சிந்தனையின்மையும், கல்வியை வியாபாரமாக மேற்கொள்ளும் பலரினாலும் இன்றய இளைய தலைமுறை தடம்மாறிப் பயணிக்கின்றது. சிறந்த தலைவர்களை உருவாக்கும் பொறுப்பு ஓரங்கட்டப்பட்டுள்ளது. பல பாடசாலைகள் தமது பொறுப்புக்களில் இருந்து விலகியே நிற்கின்றன.

மாற்றம் நிகழ்ந்துகொண்டே இருக்கும் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். மாற்றத்தை ஏற்றுக்கொண்டு அதற்கேற்றாற்போல் வழ்வதற்கான வழிகளை நாமும் பின்பற்ற வேண்டும் நம் இளைய சமுதாயத்திற்கும் கற்றுக்கொடுக்க வேண்டும். இன்றைய பிள்ளைகள் தடம்மாறி பயணிக்கின்றார்கள் என்றால் அவை வீட்டில் இருந்தே ஆரம்பிக்கப்படுகின்றது. வீட்டில் பின்பற்றும் விதிமுறைகள் மற்றும் விதி மீறல்கள் பிள்ளைகள் மத்தியில் ஆழ ஊடுருவிவிடுகின்றது. அவை பாடசாலைகள், பிரத்தியேக கல்வி நிலையங்கள் என பிள்ளைகள் கூடும் இடங்களில் எல்லாம் சமூக மயமாக்கப்படுகின்றது. இன்றய பிள்ளைகள் தனித்து வாழ்வதற்கும், இயலாமை, தாழ்வு மனப்பான்மை போன்ற உளவியல் தாங்கங்களிற்கும் உள்ளாகின்றனர். இதன் விளைவாக அவர்கள் துஷ்பிரயோகங்களிற்கு உள்ளாகின்றனர்.

பாடசாலைகள் மாணவர்களை பண்படுத்தி, அவர்கள் திறமைகளை அவர்களிற்கு புரியவைத்து நல்ல பிரஜைகளாக ஆக்க வேண்டும். நெறி பிறழ்கின்ற பிள்ளைகளின் நடத்ததையில், மனப்பாங்கில் மாற்றத்தினை ஏற்படுத்த அனுமதிக்க வேண்டும். ஆனால் நல்ல மாற்றங்களை ஏற்படுத்துதல் என்ற அடிப்படையில் சில நேர்மையான மாணவர்கள் பாதிக்கப்டுவதும், மறைமுக தண்டனைகளும் அம்மாற்றத்தினை அழித்து விடுகின்றது. பாடசாலை அதன் சமுகத்தின் தொடர்பை இழந்துவிடுகின்றது. இது பாதகமான விளைவையே தருகின்றது. பெற்றோர் - ஆசிரியர்கள் தொடர்பு இடையேயான இடைவெளி அதிகரித்து செல்வதால் பிள்ளைகள் தங்கள் பிள்ளைப்பருவத்தினை இழந்துவிடுகின்றனர். வீட்டில் பிள்ளைகள் மீது அன்பு செலுத்த நேரம் தேடும் பெற்றோரினால் அவர்களின் பிள்ளைகள் வேறு எங்கோ அந்த அன்பை நாடி, அதனால் பாதகமான விளைவுகளை சந்திக்கின்றனர். சமவயதுக் குழுக்களை தவிர்த்து வேறுபட்ட வயதுக் குழுக்களுடன் தொடர்பாடல் மற்றும் ஏனைய இடைத்தொடர்புகளை மேற்கொள்கின்றனர். இங்கே தான் போதைப்பொருள் உள்நுழைந்து நம் இளைய சமுதாயத்தினை சீரழிக்க

முனைந்திருக்கின்றது. உறவுமுறை மறந்து, கல்வி, சமூகம், கலாசாரம் என அத்தனை தனித்துவ அடையாளங்களினையும் தொலைத்து நிற்கின்றது எம் இளைய தலைமுறை. சினிமா புகுத்தும் விடயங்களிற்கு அடிமையாகி பாடசாலைகளில் நிர்வாகச்சிக்கல்களை விளைவிக்கிள்றது. இணையம், தொழிநுட்பங்கள் தவறான முறையில் பயன்படுத்தப்படுவதோடு அவை வளர்ந்தோரால் இளையோரிற்கு பிழையாக வழிநடத்தப்படுகின்றது.

பல சட்டங்கள் இயற்றப்பட்டாலும் அவற்றை மீறும் நிலையில்தான் இன்றய சமூகம் உள்ளது. எனவே கல்விச்சமுகத்திற்கும், பெற்றோரிற்கும் இடையே நல்லுறவும், புரிந்துணர்வும் ஏற்பட வேண்டும். இவைதான் நம் பிள்ளைகளுக்கு பாதுகாப்பன சமூகத்தை வழங்கும். சிறந்த தலைமைத்துவம் மிக்க தலைவர்களையும், துறைசார் வல்லுனர்களையும், நம் பிரதேசத்தின் அபிவிருத்தியையும் ஏற்படுத்தும்.

குற்றம் சாட்டுவதனால் பயன் ஏதும் இல்லை குற்றம் களைவதனால் மட்டுமே மாற்றம் விரும்பத்தக்கதாய் மாறும். நம் பிள்ளைகளை மனதில் நிறுத்தி விளைதிறன் மற்றும் வினைத்திறன் மிக்க மாணவ சமூகத்தை திருமலையில் உருவாக்குவோம்.

இ.கேதீஸ்வரன்
பௌதிகவியல் ஆசிரியர்
தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி



மாணவ தலைவர்கள்



அனர்த்த முகாமைத்துவம்



சுற்றாடல் கழகம்




Western Band Troop



ஆங்கில மன்றம்



சுற்றாடல் கழகம் ஆரம்பப் பிரிவு

# விழித்தெழுவாய்

வானம் பொய்க்கும் இல்லை
வாரி இறைக்கும்
வளர் பயிரும் வாகனமும்
அலை அடிக்க மனுக் குலமே அல்லலுறும்
வரவுக்கு வகை இன்றி
வகை வகையாய் செலவு வர
எந்நாளும் உணவின்றி
இருக்கின்ற கூட்டமொன்று

களவு குற்றம் என்று
காலமெல்லாம் அறிந்திருக்கும்
களவு செய்யும் சிறு தனத்தால்
வாழ்விடம் உன் சிறைக்களம் தான்
அந்நியன் உடை மோகம்
ஆதிக்கம் செலுத்தி இன்று – எம்
மண்ணிலே பல மனிதர்
உடை குறைந்து உருக்குலைந்து
ஊனமுற்றுக் கிடக்கின்றார்.

அற்ப சுகம் தேடி
ஆண்களும் பெண்களுமாய்
போதை என்ற புது மருந்தை
பொருள் பண்டம் முழுதிழந்து
பாதையதும் மாறும் கூட்டம்
பலர் உண்டு எம்மிடையே

மானம் இழக்காத
மறத்தமிழர் நாமன்றோ
ஈனர் இடர் எம்மில்
உடல் விற்றுப் பணம் தேடி
நாளைக் கழிப்பதுவோர்
நரகமெனக் கண்டிடுவீர்
வாழும் வழி தவறி ஆடம்பரமிகுதி

வட்டி வளரந்தனால் வாழ்விழந்து
உயிர் துறந்து பெட்டிக்குள் கிடக்கும்
பிணங்களும் இங்குண்டு.

தூரதேசம் போக வென்று
வாழுமிடம் பூமியெல்லாம்
பேரம் பேசி விற்று
பெரிய தொகை தனைக் கொடுத்து
யாரோ காசுழைக்க

நடுக்கடலில் உன்னுயிர் தான்
ஏதோ நினைத்து மாழும்
இந்த நிலை ஏன் உனக்கு
கற்கும் வயதினிலே , ஊடகப் பாவனையால்
போனும் ரிவியுமே

புதுமை செய்யும் வழி என்று
நாளும் பொழுதும் உந்தன்
வாழ்வின் ஒளி இழந்து
தேடும் பொருள் என்ன?
நேரம் விரயமாகி
கண்ணும் வலுவிழந்து
மூளையும் முடிவாகும்
முதல் நீ இதை உணர்வாய்.

ஏனிந்தக் கொடுமை – வா
மனிதா நீயும் தான்
வையகத்துள்
வாழ்வாங்கு வாழ்ந்திடுவாய்
வழிகள் எல்லாம் வசந்தமாகும்
செம்மையான பாதை தேடு
உன் உயர்வே வானம் தொடும்

**ஆசிரியர்**
**திரு. சி. தில்லைநாதன்**
**(தரம் 6 – 7)**



**Western Band**



**சிங்கிதி – 7th Trinco**



சுகாதாரக் கழகம்



7th Trinco Scouts Group



கணித விஞ்ஞான மன்றம்



நீச்சல் கழகம்



St.John Ambulance Group



உயர்தர விஞ்ஞான மன்றம்



நடன கலைக் கழகம்



சங்கீத கழகம்

# வாழ்த்துப்பா

இலிங்கநகர் திருகோணமலை வாழ்
கனகரத்தினம் ரவிதாஸ் முதல்வர்
அறுபத்து நாலில் ஆலங்கேணியில்
பிறந்து வளர்ந்து பெருங்கலை கற்று
எண்பத்தைந்தில் இணையாசிரியராய்
கண்டி கலஹா தமிழ்ப் பள்ளியினில்
கடமைகள் பல ஆற்றிய பின்னர்
எண்பத்தொன்பதில் ஆலங்கேணி
விநாயகர் பள்ளியில் பெரும் பணி செய்து
தொண்ணூற்று மூன்றில் பட்டதாரியாய்
தொண்ணூற்றைந்தில் பட்டமேற் படிப்புடன்
தொண்ணூற்றொன்பதில் ஆசிரிய ஆலோசகராகி
இரண்டாயிரத்து மூன்றில் கலை முதுமானியுடன்
இரண்டாயிரத்தொன்பதில் அதிபர் தரம் இரண்டாகி
இரண்டாயிரத்துப் பதினைந்தில் அதிபர் தரம் ஒன்றாய்
இரண்டாயிரத்தொன்றிலே ஆலங்கேணியிலும்
இரண்டாயிரத்துப் பத்திலே கலைமகள் தன்னிலும்
அதிபர் பணியினை அருமையாய் ஆற்றி
இரண்டாயிரத்து பதினேழில் உவர்மலை விவேகானந்தாவில்
தலைமை பொறுப்பை தற்றுணிவுடன் ஏற்று
ஆறாண்டாற்றிய அர்ப்பணிப்பான சேவையுடன்
முப்பத்தெட்டாண்டுகள் முழுப் பணியாற்றி
ஓய்வு பெறும் எம் அதிபர் - அவர் தம்
அரும் பணி தன்னை ஆண்டெலாம் மறவோம்
என்றும் நமக்கவர் இருப்பார் உதவியாய்
எனும் நம்பிக்கையில் விடைபகிர்வோம் - இனியவர்
கலை ஆர்வத்துடன் கழிப்பார் நாள் என
வாழ்த்தி முடிக்கின்றேன் வாழ்க அவர் பணியே



**"மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க**
**துன்பத்துள் துப்(பு)ஆயார் நட்பு" (106)**

*திருமதி. த. விஷ்ணுகுமார்*
**உதவி அதிபர்**
**தி/ உவர்மலை விவேகானந்தா**
**கல்லூரி**

# வெற்றிக் கனிகள்

கூடில்லாப் பறவையல்ல
என் வாழ்வு
வேரில்லா மரமுமல்ல
குறிக்கோளுக்காய் பயணிக்கும்
இலட்சியப் பாதை …..

கலைந்து போவதற்கு
மேகங்களல்ல …
என் ஆசைகள் ….
கோலங்களல்ல
என் எண்ணங்கள்
அழிந்து போவதற்கு ……

விழுந்ததும் மறைவதற்கு
புல் நுனியில் துயில் கொள்ளும்
வெண் பனியல்ல
என் கனவுகள்
தோன்றியதும் காணாது போக
மின்னல்களல்ல
என் இலட்சியங்கள்

காற்று வந்து பறக்கடிக்கும்
பதர் அல்ல
என் சிந்தனைகள்
பார்த்து மட்டும்
இரசிப்பதற்கு

தாளில் வரையப்பட்ட
ஓவியமுமல்ல என் கற்பனைகள்

படித்துவிட்டு எறிந்து விட
வெறுமனே புலம்பல்களல்ல
என் கவிதைகள்
அடுத்தவர் அலட்சியமாக்க
அது ஒன்றும்
பகிடிச் செய்தியுமல்ல.

முயற்சி எனும் நீரூற்றி
நம்பிக்கை உரமிட்டு
விளைச்சலுக்காய்
காத்திருக்கும்

வெற்றியின் விதைகள்
வேரூன்றிப் படரம் வேளை
காலம் பதில் கூறும்
என் இலட்சியங்கள்
வெற்றுச் சருகுகள் அல்ல என்று ......

**சி. கம்ஷிகா**
**2024 உயிர் முறைமைகள் தொழிநுட்பப்பிரிவு**

# கவிதையே கல்லூரியாய்

கோகர்ணத்தின் கோவே
உவர்மலையின் உணர்வே
கண்ணகியை காவலுக்கு நிறுத்தி
உயர்ந்து நிற்கும் உவர்மலையே

பாரதத்தின் பரமஞானியே
பார்புகழ்த சுவாமி விவேகானந்தரே
என்றும் உன் நாமம் சூடியே
எழுந்து நிற்கும் உவர்மலையே

தானங்களிலே சிறந்த தானமோ
கல்வி என்ற பெரும் ஞானமோ
வேலுப்பிள்ளை ஸ்தாபித்த வேதமோ
விதைத்தெழுந்த உவர்மலையோ

அடிமேல் அடி வைத்து நகர்ந்த சேவையே
அகிலமெல்லாம் அதிர வைத்த உன் வீரமே
ஞாலமெலாம் புகழுகின்ற உவர்மலைக் கல்லூரியே
45 ஆவது அகவையிலே அமைத்திடும் புதிய பாதையே

சாதாரண தரத்திலே சாதனைப் படைத்து
உயர்தரத்திலே உயர்வடைந்து
கல்வியோடு கலையையும் கலந்து
என்றும் கதை பேசும் உவர்மலை புகழ்ந்து

உயரத்தை அடையும் உவர்மலையே
என்றும் வாழ்க வாழியவே …….

ஸ்ரீ. லோஷிகா
தரம் : 11B



Computer Hardware and Software Team



விவேகானந்தா கலை மேம்பாட்டுக் கழகம்



உயர்தர மாணவர் ஒன்றியம்



புத்தகாக்கக் கழகம்



Society of Technology and Environmental Protection



விவசாய மன்றம்



சக்தி வள கழகம்



மாணவர் பாராளுமன்றம்



உயர்தர வணிக குழு



முத்தமிழ் மன்றம்



வீதி பாதுகாப்பு கழகம்



கல்வி சாரா ஊழியர்கள்



அகில இலங்கை பரதநாட்டிய
போட்டி 2023 தேசிய மட்டம்
தனி நடனம் – 2ம் இடம்



கர்நாடக சங்கீத அழகியல்
போட்டி 2022 தேசிய மட்டம்
தனி இசை – 2ம் இடம்



கர்நாடக சங்கீத அழகியல் போட்டி 2023 தேசிய மட்டம்
திரைஇசை பாடல் – 3ம் இடம்



கர்நாடக சங்கீத அழகியல் போட்டி 2023 தேசிய மட்டம்
நம்நாட்டு பாடல் – 2ம் இடம்





கர்நாடக சங்கீத அழகியல் போட்டி 2023 தேசிய மட்டம்
தனி இசை – 3ம் இடம்

அகில இலங்கை தமிழ்மொழித் தினப் போட்டி 2023
தனி நடனம் – 2ம் இடம்



20 வயது பிரிவு சதுரங்கம் மாகாண மட்டம்
நான்காம் இடம்



அகில இலங்கை பரதநாட்டிய போட்டி 2023
தேசிய மட்டம் குழு நடனம் 2ம் இடம்




17 வயது பிரிவு கரம் மாகாண மட்டம் – 2nd Runner Up




20 வயது பிரிவு கரம் மாகாண மட்டம் – Champion



கல்வி அமைச்சினால்
நடத்தப்பட்ட
Robotic and invention
competition 2023
மாகாணமட்டம்
முதலாம் இடம்

# வெண்ணிலவே !

கதிரவன் விடைபெறும் நேரம்
நீ உலவும் இரவு ……..
வானுக்கு உன்னால் அழகு
பூமிக்கு உன் ஒளி அழகு

ஓடும் தண்ணீரில்
உன்னை கண்டேன் …….
ஒய்யாரமே உன் அழகு
உன் அழகே விண் அழகு

வாழ்வினிலே வண்ணங்கள்
நிலவினிலே தான்
எத்தனை ஜாலங்கள்
நாளுக்கு நாள் நீ தேய்ந்து வளர்கிறாயே

பி. வர்ஷனா
தரம் : 7D

# ஆசிரியர்கள்

அறிவுத் தூண்டுகோல்களுக்கு....
அகரம் சொல்லித் தந்த சிகரங்களே
உங்களுக்கான வாழ்த்துப்பாவினையும்
அதிலிருந்தே தொடங்குகிறேன்

அறிவின் துளிகளை அள்ளிவந்து
வகுப்பறையெங்கும் புதுமை செய்கிற
அற்புத வித்தகர்கள் நீங்கள்

காதைப் பிடித்து இழுத்து வந்து
கண்களைத் திறந்தவர்கள் நீங்கள்

கை பிடித்து
சொல்லித் தந்து தான்
கைதூக்கி விடுகிறீர்கள்
களிமண்ணையும் வண்ணங்கள்
குழைத்து பெருஞ்சிற்பமாக்கும்
அருஞ்சிற்பிகள் நீங்கள்..

படி படி என பாடஞ்சொல்லும் நீங்கள்
தெய்வத்தினும் ஒரு படி மேல் தான்

நீங்கள் அறியாமை இருளகற்றும் அறிவுச்சூரியன்கள்
உங்கள் பலகை பாடம் தான் பல கைகளை உயர்த்தியது

இருட்டுக்கே வெள்ளையடிக்கிற
உங்கள் நல்லமனசு தான்
கடைசிபெஞ்சு மாணவனின்
உள்ளத்தையும் கொள்ளையடித்தது

விமர்சனங்கள் ஆயிரம் வந்தாலும்
சரிசமமாய் ஏற்கிற சாதகப் பறவைகள் நீங்கள்

கறை பூசுதல் எளிது
ஏசுதல் எளிது பரிகசித்தல் எளிது
இவையாவும் கடந்து நீங்கள்
பாலநெஞ்சங்களிடம் காட்டும்
அக்கறை தான் அளவிடற்கு அரிது

தேசம் சந்திக்கிற ஒவ்வொரு
கசப்பான சம்பவங்களிலும்
இறுதியாய் உதிர்க்கிற ஒற்றைக்கருத்து
ஆசான்களின் கைகள் கட்டப்பட்டதே
இக்கொடூரங்களுக்குக் காரணம் என்பதாய் இருக்கும்...

எது எப்படி இருப்பினும்
எண்ணமெலாம் மாணவர்
நலனிலேயே நிமிடங்களை
நகர்த்துகிற நல்லாசான்களே

இப்பெருவுலகில் ஏதோ ஒரு
குழந்தையின் மனதில் நிச்சயம்
எழுதப்பட்டுருக்கும் உங்களுக்கான
நல்லாசிரியர் என்ற உயர்விருது

அந்த அங்கீகாரத்தை மனதில் வைத்தே
இன்னுஞ் சிறப்பாய் பணிசெய்யுங்கள்
மாற்றத்தின் மகாத்மாக்களே

ஆரம்பப்பிரிவு
மாணவர்கள்

# நன்றி




விஞ்ஞான ஆய்வுகூடம்
SCIENCE LABORATORY
TEACHERS' DAY
SASI VIDEO VISION
T/ORR'S HILL VIVEKANANDA COLLEGE
(NATIONAL SCHOOL)
ANNUAL PRIZE GIVING
2022
ST. JOHN AMBULANCE BRIGADE
T/ORR'S HILL VIVEKANANDA COLLEGE
SASI VIDEO VISION
T/Orr's Hill Vivekananda College,
Trincomalee
OFFICIAL OATH CEREMONY - 2023
T/ORR'S HILL VIVEKANANDA COLLEGE, TRINCOMALEE
SS DIGITALS